# மரணத்திற்கு பின் (மறுமை) மர்மங்கள்



## அவிழ்க்கப்படும் மரணம், நரகம் மற்றும் நித்திய ஜீவன் முடிச்சுகள்

AMAZING FACTS India

The Afterlife Mystery

அமேசிங் ∴பேக்ட்ஸ் என்பது இலாப நோக்கமற்ற ஒரு ஊழியமாகும். இதன்மூலம் இயேசு கிறிஸ்துவின் இரட்சிக்கும் சத்தியங்கள் புத்தகங்களாகவும், கைப்பிரதிகளாகவும், ரேடியோ, தொலைக்காட்சி, இணையதளம், பொது நற்செய்தி ஊழியம், ஊழியப் பயிற்சிகள் மற்றும் பல வழிகளில் உலகமெங்கிலும் அறிவிக்கப்பட்டுவருகின்றன.

**எங்களது வலைதள முகவரி**

www.AFTV.in

Copyright © 2019 by
Amazing Facts International
All rights reserved.
Printed in India.

**இலவச வேதப்பாடங்கள்**

எங்களது 27 இலவச வேதப்பாட வகுப்புகளுக்குப் பதிவுசெய்ய, www.AmazingFactsIndia.org என்ற எங்கள் வலைதள முகவரியில் உள்ள முதல் பக்கத்தைப் பார்க்கவும். அதில் "வேதப்பாடம் (Bible Study)" என்ற வார்த்தையை 'க்ளிக்' செய்யவும்.

அல்லது இலவச வேதப்பாடங்களை அஞ்சல் மூலம் கற்க, உங்களுடைய பெயர், முகவரி மற்றும் தொலைப்பேசி எண்ணை எங்களுக்கு அனுப்பவும். மேலும் இந்த வகுப்புகளை எந்த மொழியில் கற்க விரும்புகிறீர்கள் என்பதையும் குறிப்பிடவும். (அச்சிடப்பட்டப் பாடங்கள் ஆங்கிலம், ஹிந்தி, தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் இந்தியாவில் மட்டுமே கிடைக்கப்பெறுகிறது. இன்னும் மற்ற அநேக மொழிகளிலும் வரவிருக்கிறது.)

Suggested Donation Rs. 100

# பொருளடக்கம்




பாகம் - 1

**மரிக்கும்போது சம்பவிப்பது என்ன?** ....06
வாழ்க்கை என்பது என்ன? ....07
ஜீவ ஆத்துமா ....08
மரணம் என்றால் என்ன? ....08
நாம் அழியாமை உடையவர்களா? ....09
பாவத்தின் சம்பளம் ....10
மரணத்தின் நித்திரை ....11
மரணத்திற்கான இடங்கள் ....12
தேகத்திலிருந்து பிரிந்திருப்பது ....12
மறுபிறவி என்பது என்ன? ....13
ஐசுவரியவானும் லாசருவும ....14



பாகம் - 2

**ஆவிமார்க்கம் என்றால் என்ன?** ....16
ஆவிமார்க்கத்தின் ஆனிவேர் ....17
ஆவிமார்க்கமும் அதின் பிரபலமான ஊடகங்களும் ....18
பொய்யான அடையாளம் ....18
ஆவிகள் என்றால் என்ன? ....19
சவுல் மற்றும் அஞ்சனம்பார்க்கிற ஸ்திரி ....19



பாகம் - 3

**சாத்தான் நரகத்திற்கு பொறுப்பாளனா?** ....20
நரகம் உண்மையில் உள்ளதா? ....21
நரகத்தை பற்றின வார்த்தைகள் ....21
துன்மார்க்கரின் முடிவு ....21
நரகம் - எங்கே மற்றும் எப்பொழுது ....22
நரகத்தின் நோக்கம் என்ன? ....23
உலகத்தை சுத்தம் செய்வது ....24
என்றென்றைக்கும் என்றால் என்ன? ....24
புழு சாவாமலும் என்றால் என்ன? ....25



பாகம் - 4

**பரலோகம் என்றால் என்ன?** ....26
பரலோகம் - என்றென்றைக்கும் உண்மையான வீடு ....27
புதிய எருசலேம் ....27
புதிய சரீரங்கள் ....28
நித்திய மகிழ்ச்சி ....28
மரணத்தின் வாசல் வரை சென்று வந்தவர்களின் அனுபவத்தைப் பற்றி ....29
பரிசுத்த நகரம் என்பது உண்மையிலேயே பெரிதா? ....29
நான் எப்படி பரலோகத்திற்கு செல்ல முடியும்? ....30



**மரணம்:** நான்கு எழுத்துகளே கொண்ட இதை எல்லோரும் யோசித்தாலும், அதைப் பற்றி பேச யாரும் விரும்புவதில்லை. நமது வாழ்க்கையில் மரணத்தை பற்றிய சிந்தனைகளை ஒதுக்கி வைத்து விட்டே நாம் நடத்துகிறோம், மற்றும் நாம் மிகவும் நேசிப்பவர்களின் இறப்பு, நமக்கு மரணத்தை வெறுக்கச் செய்கிறது. பலருக்கு இது ஒரு புரியாத புதிராக இருந்தாலும் நீங்கள் இந்நூலின் இறுதிவரை வாசிக்கும் வேளையில் அது உங்களை ஆச்சரியப்படுத்தும் விதத்தில் உங்களுக்கு ஆறுதலையும் தைரியத்தையும்மூட்டும்.



## அறிஞர்களின் கருத்துச்சுவைகள்

மரணத்தின் நிச்சயத்தை நாம் அனைவரும் அறிந்ததே. பெஞ்சமின் ஃபிராங்கிளின் “மரணம் மற்றும் வரியை தவிர, இவ்வுலகில் எதுவும் நிச்சயமில்லை”, என்று கூறினார். மரணத்திற்கு பின் நடைப்பெறுவது என்ன எனும் உண்மையை யாரும் பேச மறுக்கின்றனர்.

இதில் தெரியவருவது என்னவென்றால் ஒவ்வொருவருக்கும், புகழ் பெற்றவர்கள் முதல் உலக தலைவர்கள் வரை மரணத்தைப் பற்றி ஒரு கருத்து உள்ளது. பிரபல ஹாலிவுட் இயக்குநர் ஊடி ஆலன் கீழ்கண்டவாறு எடுத்துரைக்கிறார் “நான் இறவா தன்மையை எனது படைப்புகள் மூலமாக அடைய விரும்பவில்லை மாறாக மரணிக்காமல் இருந்தே இறவா தன்மையை அடையவிரும்புகிறேன்”. கம்யூனிச சர்வாதிகாரி மற்றும் நாத்திகர் ஆன ஜோசப் ஸ்டாலின் “மரணம் தான் எல்லா பிரச்சனைகளுக்குமான தீர்வு. மனிதன் இல்லையென்றால் பிரச்சனைகளும் இல்லை” என்று அப்பட்டமாக கூறினார்.

அரசியல் ஆர்வலர் ஹுவே நியுட்டன், “எனது பயம் மரணத்தை பற்றியது அல்ல, அர்த்தமில்லாத மரணத்தை பற்றியதே” என்று ஒப்புக்கொள்கிறார். பில்லி கிரஹம் எனும் தொலைக்காட்சி நற்செய்தியாளர் தனது கருத்தை பகிர்ந்துள்ளார், “நீங்கள் மிகவும் நேசிப்பவர்களின் மரணத்தைப் பற்றி எவ்வளவுதான் யோசித்திருந்தாலும், அது வரும் பொழுது அதிர்ச்சி அளிப்பதாகவும், ஆழ்ந்த மனவேதனையை ஏற்படுத்துவதாகவும் உள்ளது”.

எந்த கோணங்களில் பார்த்தாலும் பெரும்பாலான கருத்துகளில் உள்ள உண்மைகள் நிலையற்றதாகவே இருக்கின்றன. விஞ்ஞானியும் கலைஞருமான லியோநார்டோ டாவின்சி கூறியதாவது “சிறப்பாக கழித்த ஒரு நாள் எவ்வாறு நல்ல உறக்கத்தை கொடுக்குமோ, அவ்வாறே சிறப்பாக கழிக்கப்பட்ட ஒரு வாழ்க்கை சந்தோஷமான மரணத்தை தரும்” (நம்மில் பெரும்பாலானவர்கள் மரணத்தை “சந்தோஷமான மரணம்” என்று சொல்வதற்கு நினைத்துக்கூட பார்க்கமாட்டோம்). சிக்மணட் ஃபருடின் நம்பிக்கையானது, “எல்லா ஜீவராசிகளின் இலக்கானது மரணம்தான்”. இசைஞானி உல்ப்கேங் அமேடியஸ் மோசார்ட் பகிர்ந்துள்ளதாவது, “மரணம் என்பது உண்மையான மகிழ்ச்சியின் வாசலின் திறவுகோல் என்பதை எனக்கு புரிய சந்தர்ப்பம் அளித்த கருணையுள்ள இறைவனுக்கு நான் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்”.

எது எப்படி இருப்பினும், மறுமையில் உள்ள வாழ்க்கை பற்றிய தத்துவ பார்வைகளுக்கு பஞ்சமில்லை என்பது நிதர்சனமான உண்மை. நமக்கு உண்மையிலேயே தேவைப்படுவது திடமான, நம்பத்தகுந்த, நேரடியான பதில்கள் மட்டுமே. சரிதானே?


## நம்மை விட்டு என்றும் நீங்காத வினாக்கள் :

### மரிக்கும்போது சம்பவிப்பது என்ன?

சாதாரணமான இந்த கேள்வி எண்ணில் அடங்காத புத்தகங்கள் எழுதப்படவும், கலகலப்பான வாக்குவாதங்கள் நடைபெறுவதற்கும், திரைப்படங்கள் பெரும் வெற்றி பெறுவதற்கு உதவியாகவும், மேலும் ஆராய்ச்சி செய்யும் அறிவியல் ஆர்வலர்களுக்கு விழிப்பூட்டும் தூண்டுகோளாக அமைந்துள்ளது.

இதயம் தன் துடிப்பை நிறுத்தியப்பின், மனிதனின் உயிர் பிரிந்து வெறும் சடலமாக ஆன பின் நடைப்பெறுவது என்ன என்பதை நம்மால் அறிந்துகொள்ள முடியுமா? கல்லறைக்கு பின்னால் என்ன இருக்கிறது? பரலோகமா, நரகமா, தூய்மைபடுத்தலா, மறுபிறப்பா, வாழ்வதற்கு விவரிக்க இயலாத இடமா, அல்லது இவை எதுவும் இல்லா நிலையா?

அழிவில்லா ஆன்மாவை சுமக்கும் ஆவியை போன்ற உருவம் நம்மிடத்தில் இருக்கிறதா? துன்மார்க்கரை நிரந்தரமாக தண்டித்தும், நல்லவர்களுக்கு நிரந்தர நிம்மதி அளிக்கும் பரலோகத்தை பரிசாக அளிக்கும் இடத்தில் நிஜமான மனித தோற்றம் கொண்டவர்கள் நமக்காக காத்திருப்பார்களா? அல்லது நாம் உருவம் எதுவுமின்றி மண்ணுக்குத் திரும்புகிறோமா?



ஸ்டீவ் ஜாப்ஸ், ஆப்பிள் நிறுவனத்தின் முன்னால் தலைமை நிர்வாக அதிகாரி, தனது 56 வது வயதில் 2011 ஆம் ஆண்டில் மரித்தார். ஆவர் மரணத்திற்கு முன் கூறியதாவது “யாரும் மரிக்க விரும்பவில்லை. பரலோகத்திற்கு செல்ல வேண்டும் என்று நினைக்கும் மக்கள் கூட அங்கு செல்வதற்காக இறக்க விரும்பவில்லை இருந்தாலும் நாம் அனைவரும் பகிர்ந்து கொள்ளும் ஒரே இலக்கு மரணம் மட்டுமே. எவராலும் இதில் இருந்து தப்பிக்க இயலாது. எப்படி இருக்கவேண்டுமோ அப்படியே இருக்கிறது ஏனென்றால் மரணம் மட்டுமே மிகச் சிறந்த வாழ்க்கையின் கண்டுபிடிப்பு. மரணம் வாழ்க்கையை மாற்றும் முகவர். பழையதை புறம் தள்ளி புதியவற்றிற்கு வழி வகுக்கிறது”. மரணம் என்பது மிகச் சிறந்த யோசனையாக இருந்திருந்தால் ஏன் அதனை எதிர்த்து பெரும்பாலான மக்கள் போராடுகிறார்கள்?



## மதங்களும் மறுமையின் வாழ்க்கையும்

மரணத்தின் பின் உள்ள வாழ்க்கையை பற்றிய உண்மைகளை கண்டு அறிய முயலும் பொழுது பல நூறு கோடி மனிதா்கள் தங்கள் பார்வையை மதங்களின் மேல் திருப்பியுள்ளனா் - இருந்தாலும் மிகவும் பிரபலமான மதங்கள் போதிக்கும் கருத்தானது நோ்எதிர் தன்மையுடைய கருத்துகளை கொண்டுள்ளது. அனைத்து உயிருள்ளவற்றிற்கும் கடைசி முடிவு மரணம் என்று சிலா் நம்புகின்றனா். மற்றவா்கள், மறுபிறவியே சாத்தியம் என்று நினைக்கின்றனா். சிலா் தங்களது முன்னோர்கள் உலகத்தில் உயிரோடிருக்கிறவா்களோடு தொடா்புவைத்துக் கொண்டிருப்பதாக நம்புகிறார்கள்.

பழங்கால எகிப்தியா்கள் தங்கள் நம்பிக்கை மற்றும் இறந்தபின் செய்யவேண்டிய சடங்குகள் குறித்து விரிவான நடைமுறையை ஏற்படுத்தியுள்ளனா், மக்கள் மனதில் ஒரு மென்மையான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும், வேறு உலகிற்கு செல்வதற்காக தங்களை தயார்படுத்திக்கொள்ள உதவியை செய்வதற்கும் மரணம் எனும் புத்தகத்தில் உள்ள மந்திரங்கள் நினைவில் நிற்குமாறு மனப்பாடம் செய்யப்பட்டு, மரணத்திற்காக தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் அவா்கள் மறுபடியும் வாழ்வார்கள் என்று உயிர்நீத்தவா்களின் உடலை பதப்படுத்தி அவை கெடாமல் அப்படியே இருப்பதற்கான செயல்கள் செய்யப்பட்டன.

கிரேக்க புராணங்களில், ஹேடஸ் என்பவா் பாதாள லோகத்தின் மன்னா் என்றும், உயிா் நீத்தவா்களின் ஆத்மாவானது இங்குதான் உயிா் வாழ்கின்றன என்று கூறப்பட்டிருந்தது. கிரேக்க கடவுளான ஹோ்மெஸ் இறந்தவா்களின் ஆன்மாவை பாதாளலோகத்திற்கு எடுத்து செல்வார், சில சமயம் சிலவற்றை வாழ்க்கைக்கும் மரணத்திற்கும் நடுவில் உள்ள ஸ்டைக்ஸ் நதிக்கரையில் விட்டுவிடுவார், சாரான் என்பவா் அவா்களை நதிக்கு அப்பால் கொண்டு செல்லும்வரை - ஆனால் இதற்கு இறந்தவரின் குடும்பத்தார் தங்கத்தை லஞ்சமாக விட்டுச் செல்லவேண்டியதாய் இருந்தது.

புத்த மதத்தினா் பிறப்பு, வாழ்வு மற்றும் இறப்பின் சக்கரத்தை நம்புகின்றனா், மேலும் அவா்கள் செய்யும் செயல்களே ஆத்மாவானதை மேல் நோக்கி நிா்வாணா எனும் பரவச நிலைக்கும், கீழ் நோக்கி துயரத்திற்கும் எடுத்து செல்கிறது என்று நினைக்கின்றனா். இந்து மதத்தை சார்ந்தவா்கள் வேறுவிதமான மறுபிறப்பை நம்புகின்றனா், அதாவது செயல்கள் அடிப்படையாக கொண்ட “கா்மா” எனும் பயணம். இப்பயணமானது அவா்களை ஒரு முழுமையான ஆன்மிக நிலைக்கு கொண்டு செல்கிறது என்று கூறப்படுகிறது.

மரணத்திற்கு பின் (மறுமை) உள்ள வாழ்வை, சொா்க்கம் (ஜன்னா) அல்லது நரகம் (ஜகானம்) என்று குரான் விவரிக்கிறது. ஒரு மனிதன் மரித்த பின் கல்லறையில் இருந்து எழுவதற்கு காத்துக்கெண்டிருக்கும்பொழுது ஏழு நிலைகளில் எந்த நிலைக்கு ஆன்மாவானது உயிா்த்து நுழையும் என்பது நம் வாழ்க்கையில் எவ்விதமான செயல்களை செய்திருக்கிறோம் என்பதே தீா்மானிக்கும். நியாய தீா்ப்பு நாளின் முன்னமே இறந்தவரின் ஆன்மாவானது தனக்கு கிடைக்கப்போகும் வருங்கால விதியின் சுவையை சுவைக்க ஆரம்பித்துவிடுகின்றன என்றும் கூறப்பட்டுள்ளது.

யூதமதம் மற்றும் கிறிஸ்தவமதத்திற்கு இடையேயும் மரணம் பற்றிய வெவ்வேறு கருத்துகள் உள்ளன. யூதமதத்தின் பாரம்பரிய பார்வையில் கல்லறைக்கு “சியோல்” என்று பெயரிட்டுள்ளனா். மேலும் உயிா்தெழும் நாள் வரை “மரித்தவா்கள் ஒன்றும் அறியார்கள்.” (பிரசங்கி 9:5). இதே கருத்தில் கிறிஸ்தவா்கள் சிலருக்கும் உடன்பாடு உண்டு, இருந்தாலும், அநேகா் வேதாமத்தின் சில பகுதிகளில் உள்ள “ஆவி” மற்றும் “ஆன்மா” போன்றதை குறிப்பிட்டு உயிா் பிரியும் வேளையில் தனித்தன்மை, உணா்வு உள்ள ஒரு தெய்வீக ஆற்றல் தன் உடல் எனும் கூட்டை விட்டு பிரிந்ததும் கல்லறையின் எட்டாத தூரத்தில் வாசம் செய்கிறது என்று விளக்குகின்றனா்.

## உண்மையின் அடிப்படை

மரணத்திற்கு பின் உள்ள வாழ்வை பற்றி மாறுபட்ட கருத்துகள் இருக்கின்றபொழுது, நாம் மரிக்கும்போது இது தான் நடக்கும் என்று ஆணித்தரமாக அறிந்து கொள்ள முடியுமா? உயிரோடு இருப்பவா்களுக்கான மிகச் சாதாரணமான பதில் “இல்லை” என்பதே. அறிவியலால் கூட இதற்கான விடையை தெளிவாக இதுவரை கொடுக்கமுடியவில்லை என்பதே உண்மை.

நமது கேள்விகளுக்கான பதில் தருவதற்காகவே வேதாகமத்தின் பார்வையில் மரணமும் அதன் பின் வாழ்வை பற்றி இந்த புத்தக வெளியீடானது (பத்திரிக்கையானது) அளிக்கிறது - வேதாகமம் என்ன சொல்லியிருக்கும் என்று நாம் நினைப்பதற்கும், வேதாகமம் உண்மையிலேயே கூறும் கருத்தை அறியும் வேளையில் நாம் பிரமித்துப் போவோம். இதுவே நாம் சந்தோஷப்படுவதற்கான ஒரு காரணம் ஆகும்; ஏனென்றால் மரணத்தை பற்றிய உண்மையை நாம் அறிந்து கொள்ளும்பொழுது அது நம் மனதில் உள்ள பதட்டத்தை நீக்கி வேறு எதுவும் ஏற்படுத்தமுடியாத ஒரு நம்பிக்கை மற்றும் உறுதியை நமக்கு கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. இதன் காரணமாக நாம் நேசிக்கும் குடும்ப உறுப்பினரோ, நண்பரோ நம்மை விட்டு நிரந்தரமாக பிரிந்திடும் அந்த துயரமான நிலையில், நாம் அதை சிறந்த முறையில் கையாள உதவும்.

ஆராயப்பட்டுள்ள இந்த கண்டுபிடிப்பானது மதிப்புமிக்கது. இந்த பயணத்தில் நீங்களும் எங்களுடன் இருப்பதில் பெருமகிழ்ச்சியே.

## பாகம் - 1

# மரிக்கும்போது சம்பவிப்பது என்ன?

அன்றியும் ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே
(எபிரேயர் 9:27)



## வாழ்க்கை என்பது என்ன?

மரணம் என்பது வாழ்க்கையின் முடிவு என்று பெரும்பாலான நேரங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. ஆனால் வாழ்க்கை என்பது என்ன? பூமியெனும் இந்த கோளில் அது எவ்வாறு உருவானது? நாம் மரிக்கும் பொழுது என்ன நடக்கிறது என்பதை பற்றிய ரகசியத்தை நாம் அறிந்து கொள்ளவேண்டும் என்றால், வாழ்க்கையின் இயல்புதன்மையை முக்கியமாக நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

துவக்கம் என்ற பொருள் கொண்ட ஆதியாகமம் புத்தகத்தில், உலகின் முதல் மனிதனான ஆதாமை நம் தேவன் சிருஷ்டித்த கதையை நாம் காண்கிறோம். வேதத்தின்படி சிருஷ்டிப்பின் ஆறாம் நாளில்,

> தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார் (ஆதியாகமம் 1:27)




ஆதாமின் சிருஷ்டிப்பை பற்றிய முழு விவரங்கள் அடுத்த அத்தியாயத்தில் காணப்படுகிறது. அத்தியாயத்தில் உள்ள விவரங்களை கவனியுங்கள்:

தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான் (ஆதியாகமம் 2:7)

தேவன் ஆதாமை உருவாக்கிட இரண்டு பொருட்களை ஒன்று சேர்த்தார் என்பதை நீங்கள் கவனித்தீர்களா?

அவர் உபயோகித்த முதல் கூறு(பொருள்) "பூமியின் மண்" (ஹீப்ரு மொழியில் "அடாமா", இதன் எளிமையான அர்த்தம் என்னவென்றால் மண், தூசி அல்லது பூமி என்பதாகும்). இந்த உண்மையை ஒருவர் மரித்தபின் உடலானது அழுகி போகும் பொழுது காண முடிகிறது, அதாவது "இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி..." (பிரசங்கி 12:7). மேலும் ஆதாம் பாவம் செய்த பின், தேவன், "நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்" என்றார். (ஆதியாகமம் 3:19)

ஆதாமின் சிருஷ்டிப்பின் பொழுது உபயோகித்த இரண்டாவது பொருளானது தேவனால் அவனுக்கு நேரிடையாக தரப்பட்டது. தேவன் "ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்". தேவன் தெய்வீக சுவாசத்தை, மண்ணோடு கலந்து "ஜீவாத்துமா" உருவாக்கினார் (ஹீப்ரு நேப்பேஷ்). ஆதாம் மண்ணும், மூச்சும் இணைவதற்கு முன் இவ்வுலகில் இருக்கவில்லை, தேவன் அவனை உருவாக்கி அவனுக்கு ஜீவசுவாசத்தை ஊதினபின்புதான் மனிதனாக உருவானான்.

ஜீவசுவாசம் (ஹீப்ரு நேஷமா) என்பதின் சரியான அர்த்தம் தான் என்ன?

தேவனால் ஆதாமிற்கு அளிக்கப்பட்ட ஜீவசுவாசமானது அவன் வாழ்வதற்கான ஒரு தெய்வீகப் பொறி, உயிரற்ற உடல் கொண்ட முதல் மனிதனுக்கு உயிர் கொடுத்த ஒரு சக்தி. உயிர் வாழ்வதற்கான இந்த சக்தி ஆதாமினுடையதல்ல, அவனை சிருஷ்டித்தபொழுது அது அவனுக்கு அளிக்கப்பட்டது.

வேதத்தில் வாழ்வின் இயல்புத்தன்மையை நம்மால் காண முடிகிறது. உதாரணத்திற்கு யோபு "தேவனுடைய ஆவியானவர் என்னை உண்டாக்கினார்; சர்வவல்லவருடைய சுவாசம் எனக்கு உயிர்கொடுத்தது" (யோபு 33:4) என்கிறார்.

இதே வார்த்தையை (ஜீவசுவாசம்) விலங்கினங்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று முக்கியமாக புரிந்து கொள்ளவேண்டும். இந்த உலகம் முழுவதும் வெள்ளத்தால் சூழ்ந்திருந்த நோவாவின் நாட்களை குறித்து, வேதாகமம் கூறுவதாவது, "அப்பொழுது மாம்சஜந்துக்களாகிய பறவைகளும், நாட்டுமிருகங்களும், காட்டுமிருகங்களும், பூமியின்மேல் ஊரும் பிராணிகள் யாவும் எல்லா நரஜீவன்களும், பூமியின்மேல் சஞ்சரிக்கிறவைகள் யாவும் மாண்டன. வெட்டந்தரையில் உண்டான எல்லாவற்றிலும் நாசியிலே ஜீவசுவாசமுள்ளவைகள் எல்லாம் மாண்டுபோயின." (ஆதியாகமம் 7:21,22)

ஆதியாகமம் காலங்களில் மனிதர்கள் தெய்வீக பொருளால் உருவானவர்கள் என்று சிருஷ்டிப்பை குறித்து வேதாகமத்தை சார்ந்தில்லாதவர்கள் கூறுகின்றனர், ஆனால் வேதாகமம் மனிதனின் உடல் கட்டமைப்பானது மண்ணின் கூறுகளில் இருந்து வந்தது என்கிறது.



## ஜீவ ஆத்துமா

கிங் ஜேம்ஸ் வேதாகமமானது 'நேப்பேஷ்' எனும் ஹீப்ரு வார்த்தையை "ஆன்மா" என்று மொழிபெயர்க்கிறது. இந்த அடிப்படையிலேயே ஆதியாகமம் 2:7 இல் இவ்வாறு வழங்கப்படுகின்றது: "மனுஷன் ஜீவாத்துமாவானான்" (ஆதியாகமம் 2:7). பெரும்பாலான நவினகால மொழிபெயர்ப்பு 'நேப்பேஷ்' என்பதை 'உயிரினம்' அல்லது 'உயிருள்ள மனுஷன்' என்கின்றன.

இந்த பகுதியில் கூறப்பட்டுள்ள "ஆன்மா" எனும் சொல் மனதில் குழப்பத்தை ஏற்படுத்தலாம், ஏனென்றால் பெரும்பாலும் இந்த சொல்லை "அழிவில்லா ஆன்மா" என்பதோடு தொடர்பு படுத்தப்பட்டுள்ளது, ஆனால் இந்த கருத்தானது ஆதியாகமத்தில் குறிப்பிடவில்லை. ஆன்மாவானது ஒரு விதமான மிகத் தூய்மையான பொருளும், இது மனித உடலை விட வித்தியாசமானது என்றும், ஆதாமிற்கு இதைப்போல ஆன்மா உள்ளது என்றும் ஆதியாகமத்தில் சொல்லவில்லை. மாறாக, தேவன் பூமியின் மண்ணையும், ஜீவசுவாசத்தை அளித்தபொழுது ஆதாம் ஆன்மா ஆனான் - உயிருள்ள மனிதன் ஆனான் என்று வேதாகமம் கூறுகிறது.

'ஆன்மா' என்பது உயிருள்ள மனிதன் என்று வேதாகமத்தின் மூலம் நமக்கு தெளிவாக தெரியவருகிறது. நீங்கள் தெருவில் இறங்கி நடக்கையில் உங்களுக்கு அருகில் ஒருவர் நடந்தால், நீங்கள் ஒரு ஆன்மாவை காணுகிறீர்கள். சிருஷ்டிப்பின் கணக்கில் எந்த இடத்திலும் 'ஆன்மா' என்பது உடலை தவிர்த்து இருப்பதாக சுட்டிக்காட்டவில்லை. தேவன் கொடுத்த இந்த உடல் தவிர உணர்வுள்ள, அழிவில்லாத வாழ்க்கை தனியாக ஒன்று உள்ளது என்று அனுமானிக்க எந்த காரணமும் இல்லை. "பாவஞ்செய்கின்ற ஆத்துமாவே சாகும்" (எசேக்கியேல் 18:20) என்பதையும் வேதாகமம் கூறுகிறது.

**ஆன்மா என்பது வெறும் உயிருள்ள மனிதன்**

வேதாகமத்தில் பெரும்பாலும் 'ஆன்மா' என்ற சொல்லை ஒரு முழு மனிதனை குறிக்கவே உபயோகப்படுகிறது, சிலசமயம் மொழிபெயர்ப்பாளர்கள் உணர்ச்சிகளை குறிக்கவே பயன்படுத்துகின்றனர். வேத புத்தகத்தில் மனிதன் இரண்டு வெவ்வேறு தனித்தன்மையுள்ள பாகங்கள் கொண்டதையும் அவை தனித்தனியாக உள்ளன என்பதையும் நமக்கு கற்பிக்கவில்லை. மறுபடியும் கூறப்போனால், உடல் மற்றும் சுவாசம் சேரும் பொழுதே உயிரினம் ஆகின்றது. இந்த பிரிக்கமுடியாத இணைவே ஆன்மாவை உருவாக்குகிறது - அதாவது உயிருள்ள மனிதன்.

## மரணம் என்றால் என்ன?


எளிமையாக கூறவேண்டும் என்றால், மரணம் என்பது வாழ்கையின் எதிர்பதமேயாகும். ஆதாம் உருவானபொழுது நடந்ததின் எதிரான செயல் தான் மரணத்தின் பொழுது நடக்கும். அதாவது, ஆதியாகமம் 3:19ல் கூறியிருப்பது போல மண் என்னும் கூறுகள் கொண்ட இந்த உடலானது மறுபடியும் மண்ணுக்கே (பூமி) திரும்புகிறது, மற்றும் பிரசங்கி 12:7ல் கூறியிருப்பது போல ஜீவசுவாசமானது தேவனிடம் சென்று அடைகிறது. மறுபடியும் சொல்லப்போனால் வேதபுத்தகங்களில் தேவனிடம் சென்றடையும் 'சுவாசம்' பரலோகத்திற்கு மிதந்து செல்லும் ஒரு உணர்வு என்று கூறப்படவில்லை, மாறாக அது தேவனால் எல்லா உயிரினங்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள தெய்வீகமான, உயிர் கொடுக்கும் ஆற்றல் ஆகும்.




வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டில், கிரேக்க வார்த்தை சூஷே என்பது 'ஆன்மா' என்று சிலசமயம் மொழிபெயர்க்கப்படுகிறது. பின் வரும் பகுதியில் 'ஆன்மா' மற்றும் 'வாழ்வு' ஆகிய வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறதை கவனியுங்கள். ஏசு கிறிஸ்துவானவர் "தன் ஜீவனை ரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான். மனிதன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் - கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" (மத்தெயு 16:25,26) என்று கூறியிருக்கிறார்.

இங்கு கொடுக்கப்பட்டுள்ள ஜீவன் என்ற வார்த்தை இரண்டு இடத்தில் 'வாழ்வு' என்பதனையும், மற்ற இரண்டு இடத்தில் 'ஆன்மா' என்பதனையும் குறிக்கும், ஆனால் இவை இரண்டுமே கிரேக்க வார்த்தையான சூஷேயில் இருந்து வருபவைதான் என்று உங்களுக்கு தெரியுமா? இந்த ஒரு பகுதியில் வாழ்வு மற்றும் ஆன்மா மாறிமாறி உபயோகப்பட்டுள்ளது.

இது முக்கியத்துவம் வாய்ந்தது, ஏனென்றால் கிறிஸ்துவானவர் என்ன கூறியிருக்கிறார் என்பதை தெளிவுபடுத்துகிறது. பெரும்பாலானவர் அழியாத



மற்றும் அழிக்கமுடியாத ‘அழியாத ஆன்மாவை’ நாம் கொண்டிருப்பதாக நம்புகின்றனர், ஆனால் கிறிஸ்துவானவர் நாம் நமது ஆத்மாவை இழக்க நேரிடலாம் என்று தெளிவாக குறிப்பிடுகிறார். (நற்செய்தி என்னவெனில் நமது ஆத்மா கூட காப்பாற்றப்பட வாய்ப்பு இருக்கிறது).

அப்போஸ்தலனான பேதுரு இதை போன்றே எழுதியுள்ள பகுதி ஒன்றில் ‘ஆன்மா’ என்னும் சொல்லை பயன்படுத்தியுள்ளார். பேதுரு “அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம் பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற்போனவைகள்; அந்த பேழையிலே சிலராகிய எட்டுப்பேர் மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள்” (1 பேதுரு 3:20) என்று குறிப்பிட்டுள்ளார். அவர் தெளிவாக எட்டு உயிருள்ள மனிதர்கள் வெள்ளத்தில் இருந்து காப்பாற்றப்பட்டார்கள் என்று குறிப்பிட்டுள்ளார், இக்கருத்தையே பல மொழிபெயர்ப்பாளர்கள் இந்த பகுதியைப் பற்றி தெரிவித்துள்ளனர்.

## நாம் அழியாமை உடையவர்களா?

அழியக்கூடியது என்பது மரணத்திற்கு உட்பட்டது. உதாரணத்திற்கு “மரண அடி” என்ற வார்த்தையானது மரணத்திற்கு கொண்டு செல்லும் காயம் என்று பொருள், ஏனென்றால் அனைவரும் மரிப்பதினால் தாங்கள் அழியக்கூடியவர்கள் என்று மக்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.

எப்படி இருந்தாலும் பெரும்பாலானவர்கள் தங்கள் ஆன்மா மரணத்திற்கு அப்பாற்பட்டது அதாவது அழிவில்லாதது என்று நம்புகின்றனர் - இருந்தாலும் வேதத்தில் நம்மிடம் அழிவில்லாத பாகம் தனியாக ஒன்று இந்த உடலை தவிர உள்ளது என்று சுட்டிக்காட்டப்படவில்லை; மாறாக, கர்த்தர் கூறியிருப்பது போல, நாமோ மரிக்கக்கூடிய ஆன்மா.

நாம் இதை கவனமாக கருத்தில் கொள்வோம். அழியாமையை குறித்து வேதாகமம் உண்மையிலேயே என்ன கூறுகிறது என்று அறியும்பொழுது நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்!

உதாரணத்திற்கு, வேதபுத்தகத்தில் ஒருமுறை கூட ‘அழிவில்லா ஆன்மா’ என்பதை பயன்படுத்தவில்லை என்பது உங்களுக்கு தெரியுமா? வேதாகமத்தில் ‘அழிவில்லாதவர்கள்’ எனும் சொல்லானது மிகவும் அரிதாகவே உபயோகப்படுத்தபட்டுள்ளது என்பதே உண்மை. அப்போஸ்தலன் பவுல் எழுதியதாவது, “நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமுள்ள ராஜனுமாய், தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு, கனமும், மகிமையும், சதா காலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்” (1 திமோத்தேயு 1:17). அவர் மேலும் தேவன் ‘மட்டுமே சாவாமை உள்ளவர்’ என்று (1 திமோத்தேயு 6:16) கூறியிருக்கிறார். இதன் மூலம் தேவன் மட்டுமே அழிவில்லாதவர் என்பது தெளிவாகிறது.

இது உண்மையென்றால், மனிதனின் இயற்கைதன்மையை பற்றி வேதாகமம் என்ன கற்று கொடுக்கிறது நாம் அழியும்தன்மை கொண்டவர்களா? அல்லது அழிவில்லாதவர்களா? வேதாகமம் ஆன்மா அழிவில்லாதது என்று உண்மையிலேயே கற்று கொடுக்கின்றதா?

மரணத்தை பற்றி வேதத்தில் கூறப்பட்டுள்ள முதல் வாக்குமூலத்தை இப்பொழுது பார்ப்போம். தேவன் இதை ஆதாமிடம்





### “அழிவில்லா” நீர் கரடி

நீர்கரடி என்றும் பெயர் கொண்ட டார்டிகிரேட்ஸ், பூமியிலுள்ள மிகச்சிறிய உயிரினங்களில் ஒன்றாகும் - ஆனால் இவை நெகிழ்திறன் கொண்ட சிலவற்றில் ஒன்றாகும். எட்டு கால்கள் உடைய இந்த மிகச்சிறிய உயிரினமானது எந்தவிதமான தீவிர சிதோஷ்ண நிலைகளிலும் மற்ற உயிரினங்கள் வேகமாக மடிந்தாலும் இவை அவற்றை தாங்கி வாழக்கூடியது. இவை மிக குளிரான வெப்பநிலையான பூஜ்ஜியத்திற்கு கீழே உள்ள 458 டிகிரியில் கூட தாங்கக்கூடியது!

நீர்கரடியால் மிக ஆழத்தில் உள்ள அதிக நீர் அழுத்தத்தை விட ஆறு மடங்கு அதிகமான அழுத்தத்தை கூட தாங்கக்கூடியது, மேலும் அதனால் மனிதர்களுக்கு கொடுக்கக்கூடிய சிறிய அளவான மின்னணுவாக்கக் கதிர்வீச்சை (அயனிக்கும்) விட பல நூறுமடங்கு அதிக கதிர்வீச்சை தாங்கி உயிர்வாழவல்லது. விண்வெளியில் காற்றில்லா நிலைக்கு ஆட்கொள்ளப்பட்டும் உணவு மற்றும் நீர் இல்லாமல் முப்பது வருடம் கூட இந்த உயிரினம் தன்னை சுருக்கிக்கொண்டு உயிர் வாழ முடியும். ஒரு சிறிய துளி நீர் கூட அவற்றிற்கு புத்துணர்வு ஊட்டி - பழைய நிலைக்கு உயிர்பெற்றிருப்பது போல கொண்டு வர முடியும்.

> “இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுருபமாக்கப்படுவோம்” (1 கொரிந்தியர் 15:51,52)

பவுல் “சாவாமையை” பரிசுத்தவான்களுக்கு உயிர்த்தெழுகின்ற பொழுது கொடுக்கப்படும் என்று விவரிக்கிறார். 1 கொரிந்தியர் 15:53,54 பார்க்கவும். இது எந்த காரணத்திற்காகவும் மனிதனுக்கு என்று இயற்கையாய் அமையப் பட்டதாக பயன்படுத்தப்படவில்லை.

நேரடியாக ஏதேன் தோட்டத்தில் வைத்து கூறினார்:

> “தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் “சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்”(ஆதியாகமம் 2:16,17)

இங்கு கவனிக்க வேண்டியது என்னவென்றால் தேவனானவர் “நீ பாவம் செய்தால் நரகத்தில் வாழ்நாள் முழுதும் இருப்பாய்” என்று கூறவில்லை. ஏவாள் இந்த உண்மையை புரிந்துகொண்டாள். ஏவாள் சோதிக்கப் பட்டபோது, சர்ப்பத்தை பார்த்து “நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனியைப் புசிக்கலாம்; ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன்: நீங்கள் சாகாதபடிக்கு அதை புசிக்கவும் அதை தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள்” (ஆதியாகமம் 3:2,3)

தேவன் மனிதனை மரிக்காமல் எப்பொழுதும் உயிருடன் வாழ்வது போன்று அதாவது அழிவில்லாதன்மையுடன் படைக்கவில்லை என்று ஏதேன் தோட்டத்தில் இருந்து



விரட்டியடிக்கப்பட்டதின் விளைவுகள் நமக்கு காட்டுகிறது. “இப்பொழுது அவன் தன் கையை நீட்டி ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து, என்றென்றைக்கும் உயிரோடிராதபடிக்கு செய்ய வேண்டும் என்று, அவர் மனுஷனைத் துரத்திவிட்டு, ஜீவவிருட்சத்துக்குப் போகும் வழியைக் காவல்செய்ய ஏதேன் தோட்டத்துக் கிழக்கே கேருபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளிப் பட்டயத்தையும் வைத்தார்” (ஆதியாகமம் 3:22,24)

## பாவத்தின் சம்பளம்

வாழ்க்கை என்பது தேவன் மனிதனுக்கு கொடுக்கப்பட்ட ஈவாகும்.

ஆதாம் மற்றும் ஏவாளை சிருஷ்டித்த பொழுது, தேவன் அவர்களுக்கு அவரை கீழ்படிந்து நடப்பதற்கோ அல்லது கீழ்படியாமல் நடப்பதற்கோ சுதந்திரம் அளித்திருந்தார். அவர்கள் விருப்பத்துடனே தேவனை நம்பி கீழ்படிதலின் உறவை முழுமனதுடன் தொடர்ந்திருந்தால் மட்டுமே தேவன் அவர்களுக்கு ஈவாக கொடுத்த நித்திய வாழ்வை சந்தோஷமாக அனுபவிக்கமுடியும்.


வேதாகமத்தின் பதிவானது தெரிவிப்பதென்னவென்றால் முதல் ஜோடியானது பாவஞ்செய்ய தேர்வு செய்த பொழுது ஜீவவிருட்சத்தின் தொடர்பை இழந்தனர், இந்த முடிவானது அவர்களை இறுதியாக மரணத்திற்கு கொண்டு சென்றுள்ளது - இந்த சோகமானது மனிதகுலத்தை அன்று முதல் பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ளது.

கீழ்ப்படியாமையின் விளைவுகளைப் பற்றி தேவனின் தெளிவான போதனைக்கு எதிராக, சர்ப்பமானது (சாத்தான்) ஏவாளை நோக்கி, “நீங்கள் சாகவே சாவதில்லை” என்றான் (ஆதியாகமம் 3:4). இயேசு கூறியப்படி “பொய்க்குப் பிதாவுமாயிருக்கிற...” (யோவான் 8:44) சாத்தான், அப்பட்டமாக தேவனின் வார்த்தைக்கு முரண்பாடானவற்றை கூறினான். சாராம்சமாக, சாத்தான் ஏவாளிடம் “நீ உள்ளார்ந்தபடியே அழிவில்லாதன்மை கொண்டவள் - நீ என்ன செய்தாலும் ஒன்றுமில்லை” என்று கூறினான். மனிதர்களை ஆதிகாலமுதலே இந்த பொய்மையை ஆசைகாட்டி நம்பவைக்கப்பட்டார்கள், மற்றும் இயல்பான அழிவில்லாத்தன்மையை தழுவியதால் பல பயங்கரமான பின் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

இருந்தாலும் வேதமானது தொடர்ந்து வேறுவிதமாக போதிக்கின்றது. நன்கு அறிந்த ஒரு வசனம் தெளிவாக கூறுவதாவது “பாவத்தின் சம்பளம் மரணம்” (ரோமர் 6:23). இருந்தாலும் பெரும்பாலானவர்கள் இந்த வேத வசனத்தின் மதிப்பை அப்படியே எடுத்துக்கொள்வதில்லை. பாவத்தின்

## மரணம், இடக்கரடக்கலாக

(அலங்கார வார்த்தை) ஏன் மக்கள் சாத்தானின் அழிவில்லாதன்மை என்னும் பொய்யை எளிதாக நம்புகின்றனர் என்பதை புரிந்து கொள்ள முடிகிறது – ஏனென்றால் நாம் மரிக்க விரும்புவதில்லை. மரணம் என்பது ஒரு விரும்பதகாத தலைப்பு. ஆதலால் மனிதர்கள் இதை சமாளிப்பதற்காக அலங்கார வார்த்தைகளை கண்டுபிடித்துள்ளனர். இங்கே சில மிகவும் புகழ்பெற்ற ஆங்கில வார்த்தைகள் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.



| | | |
|---|---|---|
| மறைந்தார் | காலமானார் | நித்திரையடைந்தார் |
| மரண ஓலை | சவக்கிடங்கு | மரண ஓலம் |
| மரணப் படுக்கை | ஒப்பாரி வைத்தல் | பாடை கட்டுதல் |
| காலம் நெருங்கிவிட்டது | சமாதான நித்திரை | புழுதிக்கு திரும்புதல் |
| ஆறு அடி நிலமே சொந்தம் | சுடுகாடு | சங்கு ஊதுதல் |
| கடைசி மூச்சு நின்றுபோனது | கல்லறை | இரங்கல் |
| படுகுழி | ஆறிலும் சாவு நூறிலும் சாவு | மண்ணோடு மண்ணாதல் |
| நித்திரை அடைதல் | இறைவனடி சேருதல் | கல்லறையில் நித்திரை |
| | காடு வா என்கிறது, வீடு போ என்கிறது | |



சம்பளம் மரணமில்லை மாறாக நரகத்தின் அக்கினியில் நித்தியஜீவன் என்று போதிக்கின்றனர். இருந்தாலும் வேதாகமத்தில், நித்தியஜீவன் என்பது பரலோகத்தின் தந்தையாலே கொடுக்கப்படுகிற ஒரு சிறப்பான ஈவு என்று கூறுகின்றது.



அதிகமாக கூறப்படும் வேதத்தின் பகுதியான, யோவான் 3:16ல், இந்த உண்மையை தெளிவாக வெளிப்படுத்துகிறது. இயேசு கூறியதாவது "தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என்றார். 'கெட்டுப்போவது' என்றால் மரணம் ஆகும். சாதாரணமாக பார்த்தால், பாவமானது அனைவருக்கும் எப்பொழுதும் போலவே மரணத்திற்கு வழிவகுக்கிறது. நித்தியஜீவனை அடைய நினைப்பவர்கள் தேவனாகிய இயேசு கிறிஸ்துவை நம்புவதே அதற்கான ஒரே வழியாகும். நித்தியஜீவனின் ஈவை பெற்று கொள்ளாதவர்கள் நிச்சயம் மரணம் அடைவார்கள்.

## மரணத்தின் தூக்கம்

மரணத்திற்கு நித்திரை எனும் மற்றொரு பெயரை வேதாகமம் குறிப்பிடுகிறது.

வேதாகமத்தின் எழுத்தாளர்கள் சில நேரங்களில் 'நித்திரை' எனும் சொல்லை மரணம் என்ற வார்த்தையின் தாக்கத்தை மென்மைபடுத்துவதற்காக பயன்படுத்துகின்றனர் என்று நாம் நினைக்கலாம். உண்மையை சொல்லப்போனால் அவர்கள் இந்த சொல்லை தொடர்ந்து மரணத்தை குறிக்கவே பயன்படுத்துகின்றனர். இஸ்ரவேலின் பண்டைகால வரலாற்றாசிரியர்கள் தங்கள் மன்னர்கள் அவர்களுடைய முன்னோர்களுடன் "தூங்குகிறார்கள்" அல்லது "ஓய்வெடுக்கிறார்கள்" என்றார்கள். "சாலொமோன் தன் பிதாக்களோடே நித்திரையடைந்து, தன் தகப்பனாகிய தாவீதின் நகரத்தில் அடக்கம்பண்ணப்பட்டான்; " (1 இராஜாக்கள்: 11:43)

யோபு "மனுஷனோவென்றால் செத்தபின் ஒழிந்துபோகிறான், மனுபுத்திரன் ஜீவித்துபோனபின் அவன் எங்கே? தண்ணீர் ஏரியிலிருந்து வடிந்து, வெள்ளம் வற்றிச் சுவறிப்போகிறதுபோல, மனுஷன் படுத்துக்கிடக்கிறான்; வானங்கள் ஒழிந்துபோகுமளவும் எழுந்திருக்கிறதுமில்லை, நித்திரை தெளிந்து விழித்திருக்கிறதும் இல்லை" (யோபு 14: 10-12) என்று எழுதினார்.

தாவீது ராஜா "என் தேவனாகிய கர்த்தாவே, நீர் நோக்கிப்பார்த்து, எனக்குச் செவிகொடுத்தருளும்; நான் மரணநித்திரை அடையாதபடிக்கு என் கண்களைத் தெளிவாக்கும் (சங்கீதம் 13:3) என்றார்.


தானியேல் தீர்க்கதரிசி முன்னறிவித்தது யாதெனில் "பூமியின் தூளிலே நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்தியஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழிந்து எழுந்திருப்பார்கள்" (தானியேல் 12:2).

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் மரணத்திற்கு 'நித்திரை' என்ற வார்த்தையை உபயோகித்து உள்ளனர். ஜெப ஆலயத்தலைவராகிய யவீரு வீட்டில் அவர் மகள் மரித்தபொழுது. இயேசு அவளை எழுப்ப வந்தார். அவர் அங்கு வந்த போது கூறியதாவது "நீங்கள் சந்தடிபண்ணி அழுகிறதென்ன பிள்ளை மரிக்கவில்லை, நித்திரையாயிருக்கிறாள் என்றார்" (மாற்கு 5:39). லாசரு மரித்த பொழுது இயேசு "நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான்" (யோவான் 11:11) என்றார். அதை அவர்கள் (சீடர்கள்) தவறுதலாக புரிந்து கொண்டதினாலே, "இயேசு அவர்களை நோக்கி : லாசரு மரித்துப்போனான் என்று வெளிப்படையாகச் சொல்லி;" சொன்னார் (வசனம் 14).




லூக்கா, ஸ்தேவானின் இரத்தசாட்சி மரணத்தைப் பற்றி கூறியது "அவனோ முழங்காற்படியிட்டு; ஆண்டவரே இவர்கள்மேல் இந்த பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படி சொல்லி, நித்திரையடைந்தான்" (அப்போஸ்தலர் 7:60). பேதுருவும் மரணத்தை ".நித்திரை" என்று குறிப்பிட்டுள்ளார் (2 பேதுரு 3:4 பார்க்கவும்)

நித்திரை தான் மரணத்தின் நிலைக்கான சரியான உதாரணம் ஆகும். நாம் நித்திரையில் இருக்கும் பொழுது நம்மை சுற்றி என்ன நடக்கிறது என்று நமக்கு தெரியாது. வேதமானது மரணத்தை பற்றி கூறுவது யாதெனில் "உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்கள், மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்;" (பிரசங்கி 9:5). நாம் நித்திரையில் இருக்கும் பொழுது நமது தினசரி நடவடிக்கைகள் நின்று போகிறது. அவ்வண்ணமே மரணத்தை குறித்து



உலகளவில் ஒரு மனிதன் வாழும் காலமாக எதிர்பார்க்கப்பட்டுள்ள வயது 62 - ஜப்பானியர்கள் அதிக காலம் வாழ்வதாக அறியப்பட்டுள்ளது, ஏறக்குறைய 84 வருடங்கள், மற்றும் சியாரா லியோன் மக்கள் வெறும் 50 ஆண்டுகளே வாழ்கின்றனர். உலகில் அதிக காலம் உயிர் வாழ்ந்ததாக பதிவு செய்யப்பட்டவர் ஜென்னி கால்மெண்ட் என்பவர், இவர் 122 வயது வரை உயிர் வாழ்ந்தார். எப்படி இருந்தாலும் இரண்டு பில்லியன் மக்களில் ஒருவரே 116 ஆண்டுகள் அல்லது அதற்கு மேலே உயிர் வாழ முடியும்.




வேதம் கூறுவது என்னவென்றால் "செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய்; நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே (பிரசங்கி 9:10)

மேலும், நித்திரை விழிப்பதற்கான நேரம் வரும் என்பதை அறிவிக்கிறது. இயேசு கூறுவதாவது "பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தை கேட்குங்காலம் வரும்; அப்பொழுது நன்மைசெய்தவன் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும்," (யோவான் 5:28,29).

## மரணத்திற்கான இடம்

மரித்தபின் மக்கள் எங்கே செல்கின்றனர்? நாம் ஏற்கெனவே பார்த்ததை நினைவு கூறுவோமானால், ஒரு மனிதன் மரிக்கும்போது ஆன்மா என்பது கடவுளிடம் திரும்பி செல்கிறது, உடலானது மண்ணுக்கு செல்கிறது. பழைய ஏற்பாட்டில், மரிக்கும் பொழுது மக்கள் செல்லும் இடத்தை சியோல் என்கின்றனர், ஹீப்ரு வார்த்தையான இதன் பொருள் "கல்லறை". புதிய ஏற்பாட்டில் கிரேக்க வார்த்தையான "ஹேடஸ்" என்று பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

மரிப்பவர்கள் எல்லோரும் கல்லறைக்கே செல்கின்றனர் என்பதே வேதாகமம் கற்ப்பிக்கிறது. "மரணத்தைக் காணாமல் உயிரோடிருப்பவன் யார்? தன் ஆத்துமாவை பாதாள வல்லடிக்கு விலக்கிவிடுகிறவன் யார்? (சேலா)" (சங்கீதம் 89:48). நீதிமான்கள் மற்றும் துன்மார்க்கர் இருவருமே இந்த இடத்திற்கு தான் செல்கின்றனர். யோசேப்பு இறந்து விட்டதாக யாக்கோபு நினைத்த பொழுது, அவரது பிள்ளைகள் அவருக்கு ஆறுதல்கூறி தேற்ற முயற்சித்தனர். ஆனாலும் அவர் ஆறுதலுக்கு இடம்கொடாமல் "நான் துக்கத்தோடே என் குமாரனிடத்தில் பாதாளத்தில் (சியோல்) இறங்குவேன்" என்றார் (ஆதியாகமம் 37:35). இதே போலவே பொல்லாதவனான கோராகு மற்றும் அவர்களைப் போன்ற சமவயதுடையவர்களையும் "இவர்கள் உயிரோடே பாதாளத்தில் (சியோல்) இறங்கத்தக்கதாக இவர்களையும் இவர்களுக்கு உண்டானயாவையும் விழுங்கிப்போட்டதேயானால்" (எண்ணாகமம் 16:30)

கல்லறையில் இருக்கும் மக்கள் உணர்வுடன் இருப்பதில்லை. மறுபடியும் வேதமானது மரணத்தை, நித்திரையோடு ஒப்பிட்டு பின் அதை "மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்;" (பிரசங்கி 9:5) என்று விளக்குகின்றது. ஆன்மாவிற்கு மரணத்திற்கு பின் அதனை தாண்டி வாழும் தனியான 'இடம்' என்று எதுவுமில்லை. மரித்தவர்கள் கல்லறையில் உணர்வின்றி இருப்பர் உயிர்தெழும் நாள் வரும் வரை, அன்று கல்லறையானது (ஹேடஸ்) மரித்தவர்களை ஒப்புவித்துவிடும் (வெளிப்படுத்தின விசேஷம் 20:13 பார்க்கவும்)

## தேகத்திலிருந்து பிரிந்திருப்பது

கூறப்பட்டிருப்பது அணைத்தும் உண்மையென்றால், "இந்த தேகத்தை விட்டு குடிபோகவும்" மற்றும் "கர்த்தரிடத்தில் குடியிருக்கவும்" என்று 2 கொரிந்தியர் 5:6-8 கூறியதன் மூலமாக அப்போஸ்தலன் பவுல் என்ன கூறவிருக்கிறார்?

பிரசித்தி பெற்ற இப்பகுதியில் சொல்லியிருப்பது என்னவென்றால் "நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம். இந்த தேகத்தில் குடியிருக்கையில் கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாயிருக்கிறோம் என்று அறிந்தும், எப்பொழுதும் தைரியமாயிருக்கிறோம். நாம் தைரியமாகவேயிருந்து, இந்த தேகத்தை விட்டு குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்"

வசனங்கள் 1 முதல் 8 வரை, அப்போஸ்தலன் தற்போதைய மரிக்கும் நிலையிலிருந்து எதிர்காலத்தில் பரலோகத்தில் கிடைக்கும் நித்திய வாழ்வு பற்றி ஒப்பிடுகிறார். அவர் நமக்கு இவ்வுலகில் தற்பொழுது உள்ள அழியும்தன்மையுடைய மனித உடலுக்கும், புதிதாக நமக்கு

## வேதத்தில் 'ஆன்மா' எனும் சொல்

| புழைய ஏற்பாடு (ஹுப்ரு) சொல் | புதிய ஏற்பாடு (கிரேக்க) சொல் | |
|---|---|---|
| நேப்பேஸ்<br>נפש | சிபே<br>ψυχή | **பொருள்**<br>மனிதன்<br>வாழ்வு<br>சிருஷ்டி |

## வேதத்தில் 'ஆவி' எனும் சொல்

| பழைய ஏற்பாடு (ஹுப்ரு) சொல் | புதிய ஏற்பாடு (கிரேக்க) சொல் | |
|---|---|---|
| ருவாச்<br>רוּחַ | நியுமா<br>πνεῦμα | **பொருள்**<br>காற்று<br>மூச்சு<br>முக்கிய கூறு<br>மனது<br>ஆவி |

பரலோகத்தில் இருக்கப்போகின்ற அழிவில்லாத பரிபூரண உடலுக்கும் ஆன வித்தியாசத்தை நமக்கு காட்டியுள்ளார். அவர் இந்த இரு நிலைகளை பற்றி விவரிக்கும் தன்மையையும் கவனிக்கலாம்:

| தற்போதைய அழியும் நிலை | எதிர்கால அழிவில்லா நிலை |
|---|---|
| பூமிக்குரிய வீடு | தேவனால் உண்டான வீடு |
| இந்த கூடாரம் | கைகளினால் கட்டப்பட்டது அல்ல |
| அழியும் நிலை | பரலோகத்தில் இருந்து கிடைக்கப் பெற்ற வாழ்விடம் |
| தேகத்தில் இருப்பது | இத்தேகத்தில் இருந்து இல்லாதிருப்பது |
| தேவனோடு இல்லாத நிலை | தேவனோடு இருக்கும் நிலை |

வேதாகமம் தெளிவாக கூறுவது என்னவென்றால், நாம் மரித்த பின் நாம் உயிர்தெழும் வரை மரித்திருப்போம் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். ஆதலால் "தேகத்திலிருந்து பிரிந்திருப்பது" என்பது இவ்வுலகில் உள்ள பலவீனங்களில் இருந்து அதாவது நோய், சுகவீனம் மற்றும் மரணம் ஆகியவற்றில் இருந்து விடுபட்டிருப்பதேயாகும். தேவனுடன் இருப்பது என்பது மகிமையான அழிவில்லா தேகத்தை கர்த்தர் வரும்பொழுது நாம் பெறுவது என்பதே ஆகும்.

நாம் மரித்திருக்கும் நேரத்தில் நமக்கு நேரத்தை பற்றிய உணர்வு இருக்காது. நிச்சயமான உண்மை என்னவென்றால், மரணத்திற்கு பின் விசுவாசிகளுக்கு அடுத்து வரும் எண்ணமானது அவரது அதாவது அவன் அல்லது அவளின் மகிமையான தேகம் ஆகும். ஆனால் இது கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மற்றும் உயிர்தெழும் வரை நடக்காது. பவுல் மிகச் சரியாக அழியும்தன்மையிலிருந்து நிகழும் மாற்றம் எப்பொழுது இருக்கும் என்பதை 1 கொரிந்தியர் 15:52,53ல் குறிப்பிட்டுள்ளார், அவர், "எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும் சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ள வேண்டும்". இது கர்த்தர் வரும் பொழுது தான் நடக்கும்.

## மறுபிறவி என்பது என்ன?

பெரும்பாலானவர்கள், மறுபிறப்பை பற்றி நம்புகின்றனர், மற்றொரு பிரிவினரின் கற்பித்தல்படி ஆன்மாவானது அழிவதில்லை, இந்த வகையில், ஆன்மாவானது மறுபடியும் பிறந்து மற்றோரு தேகம் அடைகிறது, இந்த செயலானது அடுத்தடுத்த பிறவிகளிலும் தொடர்கிறது.

வேதத்திற்கும், மறுபிறப்பிர்க்கும் ஏதாவது இணக்கமான தொடர்பு உண்டா? அது இருக்க வாய்ப்பில்லை, வேதாகமம் போதிப்பது என்னவென்றால், மனிதன் மரித்தபின் அவன் பூமியிலே மண்ணாகிறான். "அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான்; அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்" (சங்கீதம் 146:4) அல்லது ".சூரியனுக்கு கீழே செய்யப்படுகிறதொன்றிலும் அவர்களுக்கு இனி என்றைக்கும் பங்கில்லை" (பிரசங்கி 9:6).

மேலும் நாம் செய்யும் நற்கிரியைகள் மூலமாக நாம் அடுத்த பிறவியில் உயர்ந்த பகுதிகளில் மறுபிறப்பெடுக்க வழிவகுக்கும் என்கிற நம்பிக்கை வேதாகமத்தில் போதிக்கப்பட்டுள்ளபடி இரட்சிப்பானது கிறிஸ்துவினால் மட்டுமே உண்டாகும் என்கிற சத்தியத்திற்கு எதிரானது. (எபேசியர் 2:8,9 பார்க்கவும்) மனிதர்கள் விழுந்தவர்கள், அவர்களை கடவுளாக மேன்மைபடுத்த கூடாது (எரேமியா 17:9 பார்க்கவும்). வேதாகமத்தில் மரித்தபின் மறுபிறவிக்கு இரண்டாவது வாய்ப்பிருப்பதாக கற்பிக்கவில்லை (எபிரேயர் 9:27,28 பார்க்கவும்)

நாம் அறிந்ததுபோல, சாத்தான் இறந்தவர்கள் உயிர் வாழ்கின்றனர் என்று கண்டுபிடித்து அறிந்ததுபோல போதித்தான். மறுபிறப்பு, முந்தைய பிறவி பற்றிய போதனை, ஆவிகளுடன் தொடர்பில் இருப்பது, ஆவிகளை வணங்குவது மற்றும் "அழியாத ஆன்மா" என்பனயாவும் சாத்தானின் கண்டுபிடிப்பே. அவன் மக்களை, அவர்கள் உண்மையிலேயே மரிக்கவில்லை என்று சமாதானப்படுத்தப் பார்க்கிறான். இறந்தவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளமுடியும் என்று நினைப்பவர்கள் "அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள்;" (வெளிப்படுத்தின விசேஷம் 16:14) மூலம் ஏமாற்றப்படுகின்றனர்.



1900 ஆம் ஆண்டில், அமெரிக்க மக்களின் தனி மனித ஆயுட்காலமாக எதிர்பார்க்கப்பட்டது 49 வருடங்கள் மட்டுமே. தற்பொழுது அது 78 ஆண்டுகளுக்கும் மேலாக மாறியுள்ளது. மேலும் 2050 ஆம் ஆண்டுக்கு பின் 90 ஆண்டிற்கும் சற்று அதிகமாக மாற வாய்புள்ளதாக அமெரிக்க கணக்கெடுப்புதுறை சுட்டிக்காட்டியுள்ளது.



### சிலுவையில் தொங்கிய திருடன்

இயேசு சிலுவையில் இருந்த திருடனிடம் அவன் தன்னுடன் அதே நாளில் சொர்க்கத்தில் இருப்பான் என்று உறுதியளிக்கவில்லையா? "இயேசு அவனை நோக்கி : இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்" (லூக்கா 23:43)

இந்த வசனத்தை வாசித்து சிலர் மரித்தவுடன் சொர்க்கம் செல்கின்றனர் என்ற எண்ணத்தை கொண்டுள்ளனர் - இந்த போதனையானது மற்ற சில வேதவசனங்களுக்கு மாறுபாடாக உள்ளது, இந்த கருத்தினால் இரண்டு முக்கிய பிரச்சனைகள் எழுகின்றன.

முதலாவதாக, கிறிஸ்து திருடனிடம், "இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய்", என்று கூறியிருந்தாலும், மூன்று தினங்களுக்கு பின் அவர் மார்த்தாளிடம் "என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை" (யோவான் 20:17) என்று கூறினார். அதனால் கிறிஸ்து தாமே ஒப்புக்கொள்கிறார் தான் சிலுவையில் அறையப்பட்ட அன்றே சொர்க்கம் செல்லவில்லை என்று. இரண்டாவது பிரச்சனையானது, திருடன் எப்பொழுது மரித்தான் என்பது பற்றியது. அந்தப்படி போர்சேவகர் சூரிய அஸ்தமனத்திற்கு முன் சிலுவையில் உயிரோடிருந்தவர்களின் மரணத்தை விரைவுபடுத்த வந்த பொழுது "அவர்(இயேசு) மரித்திருக்கிறதைத் : - (யோவான் 19:32-34) தெரிந்து கொண்டனர். ஆனால் திருடர்கள் இருவரும் உயிருடன் இருந்தனர், ஆதலால் போர்சேவகர்கள்

அவர்களின் காலெலும்புகளை முறிந்தனர், சூரிய அஸ்தமனத்திற்கு பிறகும் இந்த திருடர்கள் உயிருடன் இருந்ததற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. கிறிஸ்துவினால் எப்படி உறுதியுடன் திருடனுக்கு நம்பிக்கை அளித்திருக்கமுடியும், தான் அவனுடன் அன்றே சொர்க்கத்தில் இருப்பேன் என்று, ஏனென்றால் திருடன் அன்றேகூட மரித்திருக்கமாட்டான்?

மரணத்திற்கு பிறகு என்னவாகும் என்ற இந்த குழப்பத்தை வேதாகமம் போதிப்பதை படிப்பதன் மூலம் நமக்கு தீர்க்கப்படும். வேதம் தெளிவாக கூறுவதாவது கர்த்தர் வரும் வரை மரித்தவர்கள் சொர்க்கத்தில இல்லாமல் கல்லறையிலேயே இருப்பார்கள். (யோவான் 11:11-14, 1 தெசலோனிக்கேய 4:15-17)

நாம் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும், வேதத்தில் நிறுத்தக்குறிகள் ஈர்க்கப்படவில்லை அவை மொழிபெயர்ப்பு செய்யும் பொழுது சேர்க்கப்பட்டவை. இந்த வசனத்தில் உள்ள காற்புள்ளி முதலாவது அசல் கையெழுத்து பிரதியில் இல்லை. வேதத்தை மொழி பெயர்பித்தவர் காற்புள்ளியை இடம் மாற்றி 'இன்றைக்கு' என்பதற்கு பின் குறிப்பதற்கு பதில் அதற்கு முன்பாகக் குறித்துவிட்டார். இந்த வசனம் மிகத் தெளிவாக "நான் உனக்கு இன்று உறுதியளிக்கிறேன், நீ என்னுடன் சொர்க்கத்தில் இருப்பாய்" என்று மொழிபெயர்த்துள்ளது.

## ஐசுவரியவானும் லாசருவும்

நாம் மரித்த பின், சொர்க்கத்திற்கு போகிறோமா அல்லது நரகத்திற்கு போகிறோமா என்பதைக் குறித்து ஐசுவரியவானும் லாசருவும் என்ற உவமையிலிருந்து நமக்கு கற்றுக் கொடுக்கவில்லையா? லூக்கா 16ஆம் அத்தியாயத்தில் காணப்படும் இந்த பகுதி கூறுவது என்னவென்றால் "பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டு போய் விடப்பட்டான்; ஐசுவரியவானும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான். பாதாளத்தில் அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான்" (வசனம் 22,23).

கர்த்தர் கூறிய ஐசுவரியவானும் லாசருவும் பற்றிய உவமையானது மெய்யாகவே உண்மையா அல்லது உவமையா. இங்கே கொடுக்கப்பட்டுள்ள ஐந்து காரணங்கள் எவ்வாறு உண்மையானதாக இருப்பதற்கான சாத்தியம் இல்லை என்பதை விளக்குகின்றன:

**1** **இதில் நடந்திருக்க முடியாத உரையாடலை கொண்டிருக்கிறது.** இந்த உவமையில் சித்திரிக்கப்படுவது என்னவென்றால் ஐசுவரியவான் 'ஹேடஸ்' (நரகம்) எனும் இடத்தில் இருந்து ஆபிரகாமின் மடியிலே இருந்த லாசரஸ்சிடம் நேரடியாக பேசினான் என்பதே. பரலோகத்தில் இருக்கும் மக்களால் நரகத்தில் இருப்பவர்களுடன் பேச முடியுமா? அப்படி இருக்கும் பட்சத்தில் பரலோகத்தில் இருக்கும் மக்களால் உண்மையிலேயே நரகத்தில் இருப்பவர்கள் எரிந்து கொண்டிருப்பதை கவனித்து கொண்டிருப்பார்களா? இயேசு அப்படி இல்லை என்பதை இரட்சிக்கப்பட்டவர்களுக்கும், தொலைக்கப்பட்டவர்களுக்கும் நடுவே "பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது" (வசனம் 26) என்று விவரித்து கூறுகிறார்.

**2** **இதில் அடையாளமான குறியீடு பயன்படுத்தப்படுகிறது.** ஐசுவரியவான் ஆபிரகாமை நோக்கி "லாசரு தன் விரல் நுனியைத் நீரில் தோய்த்து, அவன் நாவைக் குளிரப்பண்ணும்படி அனுப்பவேண்டும்" (வசனம் 24) என்று கூறுவது ஒரு குறியீடாக மட்டுமே இருக்க முடியும், ஏனென்றால் இது நிஜத்தில் நடக்கமுடியாத காரியமாகும். விரலின் நுனியானது எவ்வளவு நீரை நரகத்தின் அக்கினி உள்ளே கொண்டு செல்ல முடியும், மற்றும் இதனால் எந்த அளவிற்கு நன்மையை நரகத்தில் இருப்பவர்களுக்கு கொடுக்க முடியும்.

**3** **இதில் உருவகப்படுத்தப்பட்டுள்ள கருத்துகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.** கர்த்தர் மீது விசுவாசம் வைத்திருப்பவர்கள் மரித்தவர்களேயானால் அவர்களுக்கு இதில் கூறப்பட்டுள்ளது போல ஆபிரகாமின் உண்மையான மடியில் இளைப்பாற இடம் கிடைக்குமா? ஆபிரகாமின் மடியானது எவ்வளவு பெரியது? இது ஒரு அடையாளபூர்வமான கருத்து மட்டுமே, ஏனென்றால் கர்த்தரின் இரண்டாவது வருகையின் பொழுது தூதர்கள் பரிசுத்தவான்களை "வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனைமட்டும்" (மத்தேயு 24:30,31) கூட்டிச்சேர்ப்பார்கள்.

**4** **இது மற்ற வேத பகுதியில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்கு முரண்படுகின்றன.** இந்த உவமையை அப்படியே கூறப்பட்டதாக இருக்கும் பட்சத்தில், வேதாகமத்தில் கூறும் "மரணத்தில் உம்மை நினைவுகூர்வதில்லை" (சங்கீதம் 6:5) என்பதை விவரிக்க கடினமாக இருக்கும். மாறாக, கல்லறையில் மரித்து நித்திரை பண்ணி கொண்டிருப்பவர்கள் உயிர்தெழுதலுக்காக காத்திருக்கின்றனர் (1 தெசலோனிக்கேயர் 4:15,16)

இந்த உவமையை விரிவான கண்ணோட்டத்தில் பார்த்தால் அது 'ஐசுவரியவான்' அன்றைய காலகட்டங்களில் வாழ்ந்த யூத தலைவர்களையும் 'பிச்சைக்காரன்' புறஜாதியார்களையும் குறிக்கும் ஒரு சின்னமாகவும் அதாவது இவர்கள் தேவனின் சத்தியங்களை பெறுவதற்கு தகுதியில்லாதவர்கள் என்றும் சுட்டிக்காட்டுகிறது.

கர்த்தர் லாசருவின் பெயரை தேர்வு செய்திருப்பதற்கான காரணம் என்னவென்றால் பின்னாளில் அவர் லாசருவை மரணத்தில் இருந்து உயிர்தெழ செய்வார் என்பதே. இந்த உவமையின் முக்கியமான கருத்தானது லூக்கா 16:31 இல் காணப்படுகிறது. "அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவி கொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்து போனாலும் நம்பமாட்டார்களென்று சொன்னான்" என்றார். இதுவே சம்பவமாக நடந்தது, யூத தலைவர்கள் லாசரு என்பவனை அவர்கள் கண் முன்னே மரணத்தில் இருந்து உயிர்தெழ செய்யப்பட்டதை பார்த்தும் கூட நம்பவில்லை.




மரித்தவர்கள் மீண்டும் வந்து
நம்மை சந்திக்கமுடியுமா?
காவலிலுள்ள
ஆவிகளுக்கு இயேசு
பிரசங்கிக்கவில்லையா?
மறுரூபமலையில்
மோசேயும் எலியாவும்
என்ன செய்தனர்?
மூன்றாம் வானம்
வரைக்கும் எடுத்-
துக்கொள்ளப்பட்ட
மனிதனைக்
குறித்து பவுல்
அறிந்திருக்கவ-
மரணப் பள்ளத்தாக்கு
என்றால் என்ன?
எந்தோரின் சூனியக்க-
ாரி மரித்தவர்களை
அழைத்தாளா?
தகனம் செய்தல்
என்றால் என்ன?
எனக்கு பிரியமானவரின்
கல்லறைக்கு
எத்தனைமுறை நான்
செல்லவேண்டும்?
தற்கொலை
செயலை
தேவனால்
மன்னிக்கமு
டியுமா?
இதைப்போல்
இன்னும்
அநேகக்
கேள்விகள்
உங்களிடம்
உள்ளதா?
TruthAboutDeath.com
மரணத்தைக் குறித்து
வேதாகமம் என்ன சொல்கிறது
என்பதை அறிய இன்றே
எங்களை அணுகவும்.

## பாகம் - 2

# ஆவிமார்க்கம் என்றால் என்ன?

“சாத்தானும் ஒளியின் தூதனுடைய
வேஷத்தைத் தரித்துக் கொள்வானே”
(2 கொரிந்தியர் 11:14)



**இந்த** ஆலோசனையில் உள்ள பகுத்தறிதலை நாம் காண முயற்சிப்போம்: "நல்லவர்களை பார் போற்றும். பார் என்பது பார்க்காமல் இருத்தல் என்று ஆகாது. ஆகையால், நல்லவர்களை பார்க்காமல் இருத்தல் ஆகாது".



நீங்கள் இங்கு உள்ள முடிவில் தவறு உள்ளது என்பதை யூகித்திருப்பீர்கள் ஏனென்றால் பார் என்பதற்கு இரண்டு வெவ்வேறு அர்த்தங்கள் உள்ளன. ஒரு வார்த்தையின் தவறான பயன்பாட்டினை கண்டுபிடிப்பது என்பது அவ்வளவு எளிதல்ல. ஆதலால் வார்த்தையினால் விளையாட்டு என்பது ஒரு பலம் வாய்ந்த வஞ்சனையுடன் கூடிய யுக்தியாகும்.

சாத்தான் என்பவன் வஞ்சிப்பதிலும் பொய் கூறுவதிலும் வல்லவன், தேவனின் வார்த்தையை திரித்து கூறினான், ஏவாளுக்கு ஆசை காட்டி அவளை தேவனுக்கு எதிராக மாற்றுவதற்கு சாத்தான் மரணத்தை பற்றி வஞ்சகமான பொய்யை கூறினான். அவன் இந்த பொய்மையை இன்றும் மக்களிடம் கூறிக்கொண்டிருக்கிறான் - அது இவனுக்கு சாதகமாக வேலை செய்து கொண்டிருக்கிறது.

அவன் செய்த வஞ்சகத்தினை மற்றொரு உதாரணத்தின் மூலம் காணலாம்: மக்கள் தற்பொழுது தொடர்பில் இருப்பதை விரும்புகின்றனர். நம்முடைய உறவினர்கள், நண்பர்கள் போன்றோருடன் நல்ல நெருக்கமான உறவை ஏற்படுத்திக் கொள்ள இது நல்ல காரியம் தான். இதுவே அன்பை வெளிப்படுத்தும் முறையாகும். நீங்கள் இதை போன்று மரித்தவர்களுடன் "தொடர்பில் இருக்க" விரும்பினால் அது நீங்கள் செய்யும் மிக ஆபத்தான காரியமாகும். ஏறக்குறைய மூன்றில் ஒரு பகுதி அமெரிக்கர்கள் தாங்கள் மரித்தவர்களுடன் "தொடர்பில் இருப்பதாக" நம்புகின்றனர்.

ஆவிமார்க்கம் என்பது மரித்த ஆவி உயிருள்ளவர்களிடம் தொடர்பு கொள்ளக் கூடும் என்ற நம்பிக்கை தான். இந்த தொடர்பை வழக்கமாக ஊடகங்கள் வாயிலாக ஏற்படுத்திக்கொண்டனர். இந்த கருத்து எங்கிருந்து வந்தது? மரித்தவர்களுடன் தொடர்பை வைத்துக்கொள்ள முயற்சிப்பதை வேதாகமம் என்ன கூறுகிறது. நீங்கள் மரித்த உறவினருடனோ அல்லது நண்பருடனோ தொடர்பை ஏற்படுத்திக்கொள்வதற்கு முன் முக்கியமான இந்த கேள்விகளுக்கான விடையை தெரிந்து கொள்ள வேண்டும்!

## ஆவிமார்க்கத்தின் ஆணிவேர்

மரித்தவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை நம்மை வரலாற்றின் விடியலுக்கு கூட்டிச்செல்கிறது. இந்த பழக்கமானது அமெரிக்காவில் 1800ஆம் ஆண்டு வரை வழக்கமானதாக இருக்கவில்லை, அதற்கு பிறகு மாந்திரீகவாதிகளை ஆர்வம் உள்ளவர்கள் பார்க்க சென்றார்கள் - இவர்கள் மரித்தவர்களை பலவகையான ஊடகங்கள் மூலமாக அழைக்கின்றனர், மந்திரகோல் கொண்டு வரவழைப்பது, புலன்கள் காணாதவற்றை காணும் திறன் கொண்ட மனித மனம் சார்ந்த நிலைகளில் வரவழைத்தனர் - கூறப்பட்ட தொடர்பை ஏற்படுத்தகாரணம், அவர்களது மரித்த தங்களுடைய சொந்தங்களின் நம்பிக்கையான வார்த்தைகளை பெறுவதற்கும், ஆலோசனைகளை பெறுவதற்குமே. இந்த ஊடகங்கள் மூலமாக கேட்க வேண்டியதை கேட்கவும் மற்றும் ஆவிகள் சொல்லும் தகவல்களை மக்களிடத்தில் கூறவும் உதவின.

இந்த பழக்கமானது மத்தியகால ஐரோப்பிய மற்றும் பண்டைகால எகிப்திய, சிரியா, பாபிலோனிய நாகரிகங்களில் இருந்ததை கண்டறியப்பட்டுள்ளது. இருந்தாலும், நம்மால் இதன் ஆணிவேரை அதற்கு முன்பே இருந்ததாக பின்பற்றமுடியும்.

நீங்கள் ஏற்கனவே அறிந்ததுபோல, மரணத்தைப் பற்றிய முதலாவது குறிப்பானது ஆதியாகமம் புத்தகத்தில் உள்ளது. ஏதேன் தோட்டத்தில், ஏவாள் வஞ்சகனான சாத்தான் என்னும் ஒரு அழகிய உயிரினத்தை எதிர்கொண்டாள். இங்கே தான் நம்மால் ஆவிமார்க்கத்தின் தோற்றத்தினை காண முடிகிறது.

தேவன் இரண்டு மரங்களை தோட்டத்தில் வைத்திருந்தார். ஒரு மரத்தை ஜீவவிருட்சம் மரம் என்று அழைத்தனர், இதில் உள்ள பழங்களை புசிப்பவர்களுக்கு நித்திய வாழ்க்கை தந்தது. மற்றொன்றானது, நன்மை தீமை பற்றிய அறிவினை வழங்கும் மரமாகும். ஆதாமும் ஏவாளும் இந்த தடைசெய்யப்பட்ட மரத்தின் கனியை சுவைத்தால் அதன் விளைவாக மரணம் நிகழும் என்று எச்சரிக்கப்பட்டனர்.

> தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி : நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார் (ஆதியாகமம் 2:16,17).

எனினும், சாத்தான் ஏவாளிடம் "நீங்கள் சாகவே சாவதில்லை" (ஆதியாகமம் 3:4) என்று சாத்தான் ஏவாளுக்கு உறுதியளித்தான். அவள் தடைசெய்யப்பட்டுள்ள நன்மை தீமை பற்றிய அறிவினை வழங்கும் மரத்தின் கனியை புசித்தாலும் அவள் மரணத்தை அனுபவிக்க போவதில்லை, என்று தேவன் கூறிய கருத்துக்கு முரணானதை கூறினான்.

துரதிர்ஷ்டவசமாக, ஏவாள் அவனது வஞ்சனைக்கு விழுந்தாள், பெரும்பாலானவர்கள் இன்றும் இதே பொய்க்கு தான் வீழ்ந்து கொண்டிருக்கின்றனர். நீங்கள் மரிக்கும் பொழுது உண்மையிலேயே மரிக்கிறீர்களா? பெரும்பாலானவர்கள் இதற்கான பதிலை 'இல்லை' என்றே நம்புகின்றனர். நாம் நித்தியமாக வாழ்வோம் என்ற தவறான கோட்பாடு இங்கே தான் தொடங்கியது. ஆனால் நாம் முன்பே கற்றது போல, இந்த நம்பிக்கை வேதத்தின் தெளிவான கற்பித்தலால் உதிர்ந்து போகின்றது.

சாத்தானுக்கு இந்த பொய் ஏன் முக்கியமானது? ஏனென்றால் ஆவிமார்க்கம் அதிகாரபூர்வமான வழியை தன்னுடைய அழிவுகரமான கருத்துக்களை மக்களிடத்தே போதிப்பதற்காகவும் மற்றும் அழிவை நோக்கி அவர்களை நடத்துவதற்காகவும் பயன்படுத்துகின்றனர். மரித்தவர்கள் உண்மையிலேயே மரணித்திருக்கிறார்கள் என்றால் பிறகு நம்மிடம் ஆவிமார்க்கத்தின் கூட்டங்களில் ஆவியுடாடி மூலமாக பேசுவது யார்? ஏனென்றால் அவர்கள் கல்லறையில் இருக்கிறபடியால் நம்முடைய அன்பிற்குரியவராக இருக்க முடியாது.



ஆவிமார்க்கம் என்பது மரித்த ஆவி உயிருள்ளவர்களிடம் தொடர்பு கொள்ளக் கூடும் என்ற நம்பிக்கை தான்.

## ஆவிமார்க்கமும் அதன் பிரபலமான ஊடகங்களும்

மேரி டாட் லிங்கன், முன்னாள் அமெரிக்க அதிபரின் மனைவி; ஆவிமார்க்க கூட்டங்களுக்கு, குறிப்பாக அவரது கணவர் கொலை செய்யப்பட்டபிறகு கலந்து கொண்டார் என்பதைப்பற்றி உங்களுக்கு தெரியவந்தால அதிர்ச்சி அளிப்பதாக இருக்கும். ஆவியாகியுள்ளவரின் (மரணித்தவர்) புகைப்படத்தை வைத்து தனது கணவரின் ஆவியை வரவழைக்கும்போது அவரின் அருகாமையை அடிக்கடி உணர்ந்ததாக கூறியுள்ளார். இதை பார்க்கபோனால் முதலில் நல்ல உணர்வை கொடுக்ககூடிய அனுபவமாக தோன்றினாலும், பின்னர், திருமதி லிங்கனுக்கு பல வித குரல்கள் கேட்க துவங்கிய பொழுது, அவர் காலப்போக்கில் மனநலம் பாதிக்கப்பட்டோர் இருக்கும் இடத்தில் வலுக்கட்டாயமாக சேர்க்கப்பட்டார். அவர் தற்கொலைக்கு கூட முயற்சித்துள்ளார். அவரது மகன் ராபர்ட், இந்த தவறான நடத்தைக்கு காரணம் திருமதி லிங்கன் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட ஆவிமார்க்க தொடர்பு தான் என்று நம்பினார்.

ஃபாக்ஸ் சகோதரிகளின் அனுபவம் ஆவிமார்க்கத்தின் முக்கியமான தொடக்கமாக இருந்தது. வடக்கு நியுயார்க் நகரத்தில் வாழ்ந்த மூன்று சகோதரிகள், அவர்களது வீட்டின் கீழ்த்தளத்தில் புதைக்கப்பட்ட ஒரு வியாபாரியின் ஆவியுடன் தொடர்பில் இருந்ததாக கூறினர். தட்டும் சத்தம் கேட்டதால் ஆர்வமடைந்தவர்கள், நாளுக்கு நாள் தொலைவாகவும் மற்றும் பரந்ததாகவும் அதிகமாவதை கண்டார்கள், பயணம் செய்து தங்களுக்கு மரித்தவரின் ஆவியுடனான தொடர்பை விவரித்தனர். முதல் தொடர்புக்கு பிறகு, நாற்பது வருடம் கழித்தபின், மூத்த சகோதரியான மாகி பாக்ஸ், தாங்கள் ஆவியுடனான தொடர்பை வைத்திருப்பது அனைத்தும் பொய் என்றாள் - ஆனால் பின்னர் அது உண்மை என்றாள், இதுவே ஆவியுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்பவரின் இயல்பான வஞ்சிக்கும் தன்மை.

ஃபாக்ஸ் சகோதரிகள் தான் முதன் முதலாக பெரிய அலையை புகழ்பெற்ற ஊடகங்களில் ஏற்படுத்தியவர்கள், எல்லோராலும் தொலைக்காட்சியில் பத்தாண்டுக்கு பிறகு காணமுடிந்தது. உதாரணமாக ஜான் எட்வார்ட் மற்றும் அவரது கிராசிங் ஓவர் எனும் நிகழ்ச்சி ஆகும். மறைந்த இளவரசி டயானா மற்றும் நான்சி ரீகன் ஆகியோர், ஆவியுலக தொடர்பு ஏற்படுத்திக்கொண்டவர்களில் புகழ்பெற்ற அடையாளங்களாக உள்ளனர். மாந்திரிகவாதிகள் அடிக்கடி சந்தேகம் கொண்ட மக்களால் விசாரிக்கப்படுகின்றனர், இவர்கள் இந்த கட்டுக்கதைகளை விளக்குகின்றனர், எதுவும் வேதத்தின் சத்தியம் கூட - இவர் போன்றவர்களின் பழக்கங்களை நிறுத்தமுடியவில்லை.

மரித்தவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளும் போது அதற்கு பின்னால் தீயஆவிகள் இருக்கும் என்று வேதம் கொடுக்கும் எச்சரிக்கையை மறக்கக்கூடாது. "ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு (எபேசியர் 6-12).

## பொய்யான அடையாளம்

பல காலங்களுக்கு முன்னர் மரித்து போனவர்களுடன் மீண்டும் இணையும் நிகழ்வு மிகவும் உருக்கமான அனுபவம் நிறைந்தது - இது உண்மையாக இருந்தால் மட்டுமே. சான் அண்டோறியோவில் வாழ்ந்த பார்கிளே குடும்பத்தை சேர்ந்த இளம் வயது மகன் ஒருவன் காணாமல் போய்விட்டான். மூன்று வருடங்களுக்கு பின் ஸ்பெயின் நாட்டை சேர்ந்த ஒரு மோசடிக்காரன் தானே காணாமல் போன மகன் என்று கூறினான். துயரத்தில் இருந்த அந்த குடும்பம் அவனை அந்த குடும்பத்தில் வரவேற்றது, அவனோ பிரட்ரிக் போர்டின். போர்டின் அதிக பதற்றம் நிறைந்த மனிதன், ஆதலால் அவன் அவர்களது மகன் இல்லை என்று தெரிந்தவுடன் அந்த குடும்பத்தினர் நிம்மதியடைந்தனர்.

இதே போன்று ஆவிமார்க்கமும் ஒரு மோசடிகாரனை சார்ந்துள்ளது. மரித்தவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முயலுபவர்கள், தீங்கிழைக்கும் எதிரியிடம் உறவுமுறை ஏற்படுத்திக்கொள்ள நேரிடும் ஆபத்து உள்ளது. வேதத்தில் "சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே" (2 கொரிந்தியர் 11:14) என்று கூறுகிறது. இந்த எதிரியானவன், அவனது தீய சகாக்களின் மூலம் நம்மை பல வழிகளில் ஏமாற்றுவான்.

தீய ஆவியானவை வேதத்தின் அதிகாரத்தை சிறுமைப்படுத்த முயலும். தேவன் இதை எதிர்பார்த்ததினால், அவர் ஆவிகளை எப்படி பரிட்சிக்க வேண்டும் என்று விவரித்துள்ளார் "வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்க வேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை" (ஏசாயா 8:20). எப்பொழுது மக்கள் வேதம் கூறிய இந்த பரிட்சையை புறக்கணிக்கிறார்களோ, அவர்களை இந்த மாதிரியான, குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய தவறான அழிவுக்கு நடத்திசெல்லும். மற்றும் பிசாசானது, வேதத்தில் தேவனை காட்டும் விதம் போல் அல்லாமல் வித்தியாசமான முறையில் அவரை காட்டுகிறது. தேவன் அன்பானவர், ஆனால் சவுலின் வாழ்க்கை பார்க்கும்போது (பக்கம் 19தை பார்க்கவும்) தேவன் நியாயமற்றவராகவும், பழிவாங்குகிறவராகவும், அனுபவத்தின்படி இரக்கமற்றவராகவும் தோன்றச்செய்யும். பிசாசானவன், மக்களை





சான் ஜோஸ் கலிபோர்னியாவில் இருக்கிற வின்செஸ்டர் மிஸ்டரி ஹவுஸ்யில் எங்கும் முடியாத படிக்கட்டுகள் மற்றும் மேற்கூரையில் கட்டப்பட்டுள்ள கதவுகள் உள்ளன. இந்த வீட்டில் பல வருடங்களாக ஒரு பிரபலமான துப்பாக்கி கம்பெனி நிறுவனரின் விதவையை பிசாசுக்கள் அடிக்கடி தேடி வருகிற பேய் வீடு என்று பரவலாக்கினார்கள்.

உண்மையான, அன்பான, நியாயமான கடவுளை, அவரை புரிந்து கொண்டு உண்மையான பந்தத்தை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறவரை புறம் தள்ளுகிறான்.

## ஆவிகள் என்றால் என்ன?

1940ஆம் ஆண்டுகளில், இரண்டு நாட்டுப்புற கலைஞர்கள் ஆவிகள் பற்றிய கதைகளை படித்தார்கள், அதுவும் இரு எதிர்-மறையான திசையில் இருந்த அமெரிக்க மாநிலங்களில் அதாவது நியுயார்க் மற்றும் கலிபோர்னியா. இரண்டுக்கும் இருந்த தொலைவை காட்டிலும், அவர்கள் இருவரும் பல கதைகளில் கேட்டறிந்தது, ஒரு ஆவியானது லி.்.ப்ட் கேட்கும் மனிதர் போல தோன்றி அதனை கார்களில் ஏற்றி வரும் பொழுது பாதிவழியில் அது மாயமாக மறைந்து விடுவதே.

விஞ்ஞானம் வளர்ச்சியடைந்திருந்தாலும், இந்த மாதிரியான இயற்கைக்கு மீறிய கதைகள் ஆனவை இப்பொழுதும் நடைபெறுகிறது. ஆவிகளின் விதவிதமான நடமாட்டங்கள் இன்றும் வினியோகிக்கப்படுகின்றன. இவை மறைவதற்கு வாய்ப்பில்லை. ஹாலிவுட் திரையுலகமும் பத்திரிக்கை உலகமும் ஆவிகளை பற்றிய அதிதீவிர ஆர்வத்துக்கு தீனி போடுகின்றன.

நாம் கேட்கவேண்டிய ஆழமான கேள்வி என்னவென்றால் இவை மரித்தவர்களின் ஆவிகளா, அல்லது இதில் வேறு ஏதும் சக்தி சம்பந்தபட்டிருக்கிறதா? வேதாகமம் ஆவியை பற்றி என்ன கூறுகிறது? நாம் ஏற்கனவே படித்து அறிந்திருப்பது போல், ஆவியானவை நமது ப்ரியமானவர்களாக இருக்க முடியாது ஏனென்றால் அவர்கள் மரித்துவிட்டார்கள், உயிர்தெழுதல்வரை அவர்கள் கல்லறையில் ஓய்வெடுத்துக் கொண்டிருப்பார்கள் (அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:29 பார்க்கவும்). இவர்கள் மரித்தவர்களாக இல்லை என்றால், பின் இவர்கள் யாராயிருப்பார்கள்? தேவனுடைய வார்த்தை விளக்குவது என்னவென்றால், எல்லா இயற்கைக்கு மீறிய நடவடிக்கைகள் - தேவனும் அவரது தேவதூதர்கள் தவிர என்றால் அவை சாத்தான் உடையது (1 கொரிந்தியர் 10:20, உபாகமம் 32:17) "சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வானே", (2 கொரிந்தியர் 11:14) என்பதை மறந்து விடாதீர்கள்.

இந்நாட்களில் இதைப்பற்றி தெரிந்து கொள்ள வேண்டியத்தின் அவசியம் என்ன? வேதாகமத்தில் தீர்க்கதரிசனமாக கூறுவது என்னவென்றால் கடைசிகாலத்தில் மக்கள் தங்களை "வஞ்சிக்கிற ஆவிகளுக்கு", செவி கொடுப்பார்கள். (1 தீமோத்தேயு 4:1). ஒரு ஆவி நீண்ட நாள் உறவினர் என்று உங்களிடத்தில் வந்து கூறினால் நீங்கள் அதை நம்பக்கூடாது (1 யோவான் 4:1). ஒரு ஆவி வேதத்தில் இல்லாததையும் அதற்கு எதிரானவற்றையும் கூறும் என்றால், அது தேவனுக்காக பேசவில்லை. (ஏசாயா 8:19,20).




## சவுல் மற்றும் என்டோரில் அஞ்சனம்பார்க்கிற ஸ்திரி

சவுல் ராஜா, தேவனுடைய கட்டளைகளை சாமுவேல் எனும் தீர்க்கதரிசியின் மூலமாக அறிந்திருந்தான், ஆனால் அவன் தேவனது கட்டளைக்கு எதிரான கிளர்ச்சிகளை செய்தான். அவன் செய்த மிகப்பெரிய கிளர்ச்சிக்கு பிறகு, சாமுவேல் சவுலை எச்சரித்தார் "இரண்டகம்பண்ணுதல் பில்லிசூன்ய பாவத்திற்கு ஒப்பானது." (1 சாமுவேல் 15:23). அதாவது சொல்லப்போனால், நீங்கள் தேவனது வார்த்தைகளை கேட்க விரும்பவில்லை என்றால் நீங்கள் பில்லிசூன்ய வழியாய் மரித்தவர்களின் ஆவியுடைய வார்த்தைகளை கேட்கிறவர்களாய் இருப்பீர்கள்.



இது தீவிரமாக நமக்கு தோன்றினாலும், கானானியர் மற்றும் மோவாபியர் போன்ற மதங்களில் பில்லிசூன்யங்கள் சேர்த்து இருந்தது. அந்த ஆவிகள் கடவுளாக பாவிக்கப்பட்டு மரித்தவர்களிடம் எதிர்காலம் பற்றிய கருத்துகள் கேட்கப்பட்டது. இந்த சடங்குகளில் அடிக்கடி மிருகங்களை பலியிடுதல், ரத்தத்துடன் கூடிய உணவை உண்ணுவது போன்றவற்றை உள்ளடக்கியதாக இருந்தது. எனினும், அவர்கள் தொடர்பு கொண்டிருந்த ஆவியானது உண்மையிலேயே பேய்களாகும் (சங்கீதம் 106:37,38).

தேவன் இறுதியாக சவுலிடம் தொடர்பு கொள்வதை நிறுத்திவிட்டார். நம்பிக்கை இழந்த சவுல், தேவனின் வார்த்தைகளை கேட்பதற்காக ஒரு அஞ்சனம்பார்க்கிற ஸ்திரி மூலம் தீர்க்கதரிசி சாமுவேலை தொடர்பு கொள்ள முயன்றான், ஏனென்றால் சாமுவேல் அச்சமயம் மரித்திருந்தார். அந்த அஞ்சனம்பார்க்கிற ஸ்திரி கானானியர் மதத்தினரை போன்று வழிபாடு செய்தாள். அவள் ஹூப்ரு வார்த்தையான 'எலோஹிம்' என்பதை அவள் கண்ட ஆவியை குறிப்பிட பயன்படுத்தினால், அதன் மொழிபெயர்ப்பு 'தேவர்கள்' (1 சாமுவேல் 28:13), மற்றும் அந்த கூட்டத்தை ஒரு கொழுத்த கன்றுக்குட்டியை கொன்று நிறைவு செய்தால் (வசனம் 24), 'கொலை' என்ற வார்த்தை ஹூப்ரு வார்த்தையான உயிர்பலி என்பதில் இருந்து வருகிறது. இந்த நிகழ்வானதை கடவுள் கண்டித்தார் அதாவது சவுலானவன் செய்ததை (1 நாளாகமம் 10 :13,14) மற்றும் இந்த செயல் அவனை மரணத்திற்கு வழிவகுக்கும் என்றார்.

சவுலுக்கு நம்பிக்கை தராமல், சாமுவேல் போல ஆள்மாறாட்டம் செய்த ஆவியானது கடவுள் சவுலுக்கு தண்டனையை அதிகப்படுத்தியுள்ளார் அவன் அவனது பாவத்திற்கான தண்டனையை பெற்றிருந்த பிறகும் இவ்வாறு கூறியது. சவுல் அந்த பேயை நம்பி தன்னைத்தானே போரில் மாய்த்துக்கொண்டான். கடவுளின் பக்கம் இருந்து தன்னை ஆவிகள் மற்றும் சாத்தானின் பக்கம் திரும்பிக்கொண்டவனுக்கு என்ன ஒரு துக்ககரமான முடிவு.

பாகம் - 3

# சாத்தான் நரகத்திற்கு பொறுப்பாளனா?

அவர்களை மோசம்போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்கத்தரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான்.
(வெளிப்படுத்திய விசேஷம் 20:10)



## நரகம் உண்மையில் உள்ளதா?

பெரும்பாலும் எல்லா கலாச்சாரங்களிலும் மற்றும் மதங்களிலும் நரகத்தைப் பற்றிய கருத்து உள்ளது அந்த உலகம் தொடர்ந்து மரித்தவர்கள் வலியுடன் வாழும் வேறொரு உலகமா அல்லது பேய்கள் மட்டுமே இருக்கும் இருண்ட சாம்ராஜ்யமா. சிலர் நரகத்தை சாதாரண, வியத்தகு, இடைக்கால, கற்பனை செய்யப்பட்டுள்ள கதை மற்றும் போதகர்கள் மக்களை பயமுறுத்த கூறுபவை என்றே நினைக்கின்றனர்.

நரகம் என்பது இருக்கும் என்றால், எங்கே உள்ளது? அதன் இறுதியான நோக்கம் தான் என்ன?

நரகம் பற்றிய கருத்துகள் அனைத்தும் அதை மரித்த பிறகு பின்வாழ்வில் வேதனை தரக்கூடிய இடமாகவே கருதப்படுகிறது. சிலர் இதை துன்மார்க்கர் முடிவில்லாமல் தண்டிக்கப்படும் இடமாக போதிக்கின்றனர். மற்றும் சிலர் இதை மரணத்துக்கும், மறுப்பிறப்புக்கும் நடுவில் வரும் ஆன்மீக அனுபவம் என்று கூறுகின்றனர். வேறு சிலர் நரகமானது வேறேதுமில்லை தூசியும், அமைதியும், இருட்டும் நிறைந்த மரித்தவர்களுக்கான உறைவிடம் என்று நம்புகின்றனர்.

நிச்சயமாக, நரகத்தை பற்றிய உண்மையை கண்டறிவதற்கான ஆதாரம் வேதத்தில் உள்ளது. நீங்கள் நரகத்தை பற்றி அது என்ன கூறுகிறது என்று யூகிக்க வாய்ப்பிருக்கிறது. ஏனென்றால் நீங்கள் பிரசங்கத்தில் இதை குறித்து கேட்டிருப்பீர்கள். நீங்கள் பேய் படங்களில் மற்றும் அதை பழித்து பேசியிருக்கும் சிரிப்பு நிகழ்ச்சிகள் மூலம் நரகத்தை பற்றி விவரித்திருப்பதை அறிந்திருப்பீர்கள். ஆனால், நீங்கள் வேதம் இதை பற்றி என்ன கூறுகிறது என்று உண்மையிலேயே படித்திருக்கிறீர்களா?

## நரகத்தை பற்றின வார்த்தைகள்

ஆங்கில வேதாகமத்தில் மொழிபெயர்க்கப்பட்ட 'நரகம்' எனும் சொல்லால் நமக்கு உண்டாகியிருக்கும் சில குழப்பங்களை நாம் தெளிவுபடுத்திக் கொள்வோம். சில சமயங்களில் பழைய ஏற்பாட்டின் ஹுப்ரு வார்த்தையான 'சியோல்' மற்றும் புதிய ஏற்பாட்டின் கிரேக்க வார்த்தையான 'ஹேடஸ்' ஆகியவை 'நரகம்' என்று மொழியாக்கம் செய்யப்படுகிறது, அதாவது கிங் ஜேம்ஸ் வேதத்தில் இருப்பது போல. ஆனால் இன்றைய நவீன கால மொழிபெயர்ப்புகளில் இந்த வார்த்தைகளை 'நரகம்' என்று மொழிபெயர்ப்பதில்லை ஏனென்றால் 'சியோல்' மற்றும் 'ஹேடஸ்' ஆகியவை எரிந்து கொண்டிருக்கும் மற்றும் வேதனை தரும் இடமானதைப் பற்றி எதுவும் கூறவில்லை.



பல பதிப்புகள் 'சியோல்' மற்றும் ஹேடஸ்' ஆகியவற்றை 'கல்லறை', 'மரித்தவர்களின் இடம்', 'ஆழங்களில்' என்ற வார்த்தைகளை நல்லவர்களும், பொல்லாதவர்களும் மரணத்திற்கு பின் உயிர்தெழுதலுக்காகவும், தீர்ப்புக்காகவும் காத்திருக்கும் இடமாக விவரிக்கின்றன: நாம் ஏற்கனவே பாகம் - 1இல் கண்டது போல கல்லறையில் இருக்கும் பொழுது மரித்தவர்கள் உணர்வில்லாமல் இருக்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டில், மற்றுமொரு கிரேக்க வார்த்தையான 'கெஹன்னா' என்பதை 'நரகம்' என்று மொழிபெயர்த்துள்ளனர். இந்த வார்த்தையானது ஹுப்ரு சொல்லான 'கெஹின்னோம்' என்றதிலிருந்து வருகிறது. இதன் அர்த்தம் 'ஹின்னோம் பள்ளத்தாக்கு'. இந்த பள்ளத்தாக்கானது எருசலேமின் தெற்கு பகுதியில் இருந்தது. மேலும் இது ஒரு காலத்தில் இஸ்ரவேல் மக்கள் தங்கள் பிள்ளைகளை இங்குதான் அக்கினியில் அன்னிய தேவர்களுக்கு பலி செலுத்தினர். (2 நாளாகமம் 28:3). எரேமியா தீர்க்கதரிசி, இந்த பள்ளத்தாக்கானதை "ஹின்னோம் பள்ளத்தாக்கென்று சொல்லபடாமல் சங்காரப்பள்ளத்தாக்கென்று சொல்லப்படும், ஒரு தீர்ப்புக்கான இடம் (எரேமியா 7:32)என்றார். இறுதியில் இந்த இடமானது மரித்த மிருகங்களின் உடலையும், கழிக்கப்பட்ட பொருள்கள் போன்றவற்றை போட்டு எரிக்கும் குப்பை கிடங்காக மாறியது.



இயேசு ஹின்னோம் பள்ளத்தாக்கை நரகத்தில் உள்ள நெருப்பை குறிக்க பயன்படுத்தினார். அவர் மலை பிரசங்கத்தில் உபதேசித்த போது "மூடனே என்று சொல்கிறவன் எரிநரகத்திற்கு ஏதுவாயிருப்பான்" (மத்தேயு 5:22) என்று எச்சரித்தார். எரிநகரம் என்ற சொல்லானது "கெஹன்னாவின் நெருப்பு"இல் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. உண்மையாகவே, நரகம் எருசலேம் அருகில் உள்ள பள்ளத்தில் உள்ளது என்ற அர்த்தத்துடன் கர்த்தர் கூறவில்லை. மாறாக இந்த நெருப்பானது, இறுதி தீர்ப்பின்பொழுது பட்சிக்கும் அக்கினியின் சின்னமாக விளங்கும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## தீயவர்களுக்கான "முடிவு"

துன்மாக்கர் கடைசியில் எங்கு செல்வார்கள் என்பதை குறித்து வேதாகமம் நமக்கு என்ன சொல்லிக் கொடுக்கிறது? பூமிக்கு அடியில் எங்கோ இருக்கும் நரகத்தில் எரிந்து கொண்டிருக்கும் அக்கினியில் சிக்கி துன்மாக்கர் நிரந்திரமாக கஷ்டப்படுவார்களா? வேதாகமம் கூறுவதாவது "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான "நித்தியஜீவன்" (ரோமர் 6:23). மரணம் பாவத்திற்கான விளைவு என்றால் பின் எவ்வாறு தீயவர்களுக்கு நித்தியஜீவன் கிடைக்கும் - அப்படி என்றால் இது நரகத்தின் அக்கினியில் நித்தியமாக வாழ்வது என்பதா?

நாம் இதை இன்னும் உன்னிப்பாக பார்ப்போம்.

ஒரு பழமொழியில் "துன்மார்க்கனுக்கு நல்முடிவு இல்லை; துன்மார்க்கனுடைய விளக்கு அணைந்துபோம்" (நீதிமொழிகள் 24:20) என்கிறது. தாவீது எழுதினார், "பொல்லாதவர்கள் அறுப்புண்டு போவார்கள்; கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்" (சங்கீதம் 37:9). மற்றும் "பாவிகள் பூமியிலிந்து நிர்மூலமாகி, துன்மார்க்கர் இனி இராமற்போவார்கள்" (சங்கீதம் 104:35) என்றார். இயேசு "ஆதலால் களைகளைச் சேர்த்து அக்கினியால் சுட்டெரிக்கிறதுபோல, இவ்வுலகின் முடிவிலே நடக்கும்" (மத்தேயு 13:40) என்று விளக்கினார்.

துன்மார்க்கரை அணைந்துபோம், அறுப்புண்டு, நிர்மூலமாகி, சுட்டெரிக்கிறது என்று கூறியிருப்பதன் அர்த்தம் தான் என்ன? இதைப்பற்றிய மிகவும் நேரடியான விளக்கங்களில் ஒன்று பழைய ஏற்பாட்டின் கடைசி புத்தகத்தில் காணப்படுகிறது. "இதோ, சூளையைப்போல எரிகிற நாள் வரும்; அப்பொழுது அகங்காரிகள் யாவரும்

அக்கிரமஞ்செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்; வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற்போகும் (மல்கியா 4:1). மிக தெளிவாக தேவன் "துன்மார்க்கரை மிதிப்பீர்கள்; அவர்கள் உங்கள் உள்ளங்கால்களின்கீழ் சாம்பலாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார்" (மல்கியா 4:3). துன்மார்க்கர் நரகத்தில் உள்ள அக்கினியில் சிக்கி நிரந்தரமாக கஷ்டப்படுவார் என்ற பிரபலமான எண்ணத்திற்கு எதிரானதாக உள்ளது. மாறாக வேதாகமம் கூறுவது என்னவென்றால் அவர்கள் முழுமையாக எரிக்கப்பட்டு அழிக்கப்பட்டு, நிர்மூலமாகி, நுகரப்படுவார்கள் என்பதே.

## நரகம் - எங்கே மற்றும் எப்பொழுது

உலகத்தில் உள்ள பல மதங்கள் கிறிஸ்துவ மதத்தின் பிரிவுகளில் சிலர் உட்பட துன்மார்க்கர் மரித்ததும் உடனே நரகத்திற்கு கொண்டு செல்லப்படுகிறார்கள் என்றும் அவர்கள் செய்த பாவத்திற்கான பலன்களை அனுபவிப்பதற்காக என்றும் போதிக்கின்றனர். ஆனாலும், வேதாகமம் இந்த கருத்தை ஆதரிப்பதில்லை.

வேதத்தின் படி, இக்கணம் வரை ஒரு மனிதன் கூட நரகத்தில் தண்டிக்கப்படவில்லை. "கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்" (2 பேதுரு 2:9). இதில் கவனிக்கப்படவேண்டியது என்னவென்றால் அநியாயம் செய்தவர்களுக்கு நியாயத்தீர்ப்புகென்று ஒரு நாள் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நியாயத்தீர்ப்பு வழங்கும் நாளானது மரித்த தினத்தன்று இருப்பதில்லை அது பிற்காலத்தில் நடக்கக் கூடிய ஒரு நிகழ்வு எவரும் நரகத்தில் இன்று தண்டிக்கப்படவில்லை என்பதே இதன் அர்த்தமாகும்.

பாவம் செய்தவர்கள் எப்பொழுது நரகத்தின் அக்கினியில் போடப்படுவார்கள் என்பதை இயேசு விவரிக்கிறார் "ஆதலால், களைகளைச் சேர்ந்து அக்கினியால் சுட்டெரிக்கிறது போல, இவ்வுலகத்தின் முடிவிலே நடக்கும். மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவருடைய ராஜ்ஜியத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்" (மத்தேயு 13:40-42)

மற்றொரு தவறான கருத்து என்னவென்றால் நரகத்தின் அக்கினியானது பூமியின் உள் இருந்து தொடங்குகிறது என்பது. ஆனால் வேதாகமத்தில் எதிராக கூறுவதென்னவென்றால் "தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி




## வேதாகமத்தில் நரகத்தை குறிக்கும் சொற்கள்

**சியோல்:** பழைய ஏற்பாட்டில் உள்ள ஹூப்ரு வார்த்தையில் கல்லறை அல்லது மரித்தோரின் இளைப்பாறும் இடம் என்று சித்தரிக்கப்பட்டுள்ளது; சில மொழிப் பெயர்ப்பாளர்கள், கிங் ஜேம்ஸ் வேதாகமத்தில் இதை "நரகம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

**அபாடன்:** ஹீப்ரு வார்த்தையான "அழிவு" என்பதை குறிக்கும் இந்த வார்த்தையானது KJVஇல் ஒரு முறை மட்டுமே வெளிப்படுத்தின விசேஷம் 9:11இல் பயன் படுத்தப்பட்டுள்ளது. மொழிபெயர்ப்புக்களில் RSVஇல் ஏழு பதிப்புகளில், ஆறு பதிப்புகள் இணையாக குறிப்பிடும் வார்த்தை "சியோல்".

**கெஹன்னா:** கிரேக்க சொல்லில், தண்டனை கொடுக்கும் இடத்தை குறிக்கிறது. பன்னிரெண்டு முறை புதிய ஏற்பாட்டில் காணப்படும் இந்த சொல் எருசலேம் அருகில் உள்ள ஹினோம் பள்ளத்தாக்கை குறிக்கிறது, - இயேசுவின் காலத்தில் வேண்டாத கழிக்கப்பட்ட பொருட்களை எரிக்கப்பட்ட இடமாக இருந்தது. அவர் இந்த இடத்தை இறுதி தீர்ப்பின்பொழுது அழிவை ஏற்படுத்தும் அக்கினியை விளக்குவதற்கு பயன்படுத்தினார்.

**ஹேடிஸ்** இந்த கிரேக்க வார்த்தையானது கண் காணாத உலகத்தையும், மரித்தோரின் உலகத்தை மற்றும் கல்லறையை குறிக்கிறது. இது சியோல் வார்த்தைக்கு சமமானது. சில மொழிபெயர்பாளர்கள் அதாவது கிங் ஜேம்ஸ் வேதாகமத்தில் இதை "நரகம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

**டார்டாரஸ்** இந்த கிரேக்க வார்த்தை ஒரு முறையே பயன்படுத்தப்பட்டு "நரகம்" என்று விளக்கம் தரப்பட்டுள்ளது. உண்மையில் சொல்லப்போனால் "டார்டாரஸ் இல் தூக்கி போடுவது" என்றால் கலகக்கார தூதர்களை தூக்கி போடப்படும் இடம்.

**நிரந்தரமான** இது கிரேக்க வார்த்தையான "அயோனியோஸ்" இல் இருந்து வருகிறது. இதை கடைசி காலத்தில் நெருப்புடன் தொடர்பு படுத்திபார்க்கும் பொழுது அது வலியுறுத்துவது என்னவென்றால் நெருப்பின் அழிக்கும் தன்மை தான் இன்றி எரியும் அக்கினியின் காலத்தை அல்ல.

அவர்களைப் பட்சித்துப்போட்டது" (வெளிப்படுத்தின விசேஷம் 20:9). பாவம் மற்றும் பாவிகள் விரைவாக நெருப்பினால் விழுங்கப்படுவர் ('பட்சிக்கும்' அல்லது 'அழிக்கப்படும்'). துன்மார்க்கருக்கு, "தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே" (எபிரேயர் 12:29). இறுதி தீர்ப்பின் முடிவானது என்னவென்றால் துன்மார்க்கர் "உங்கள் உள்ளங்கால்களின்கீழ் சாம்பலாயிருப்பார்கள்" (மல்கியா 4:3)

"இதோ, நீதிமானுக்கு பூமியில் சரிக்கட்டப்படுமே; துன்மார்க்கனுக்கும் பாவிக்கும் எத்தனை அதிகம்" (நீதிமொழிகள் 11:31)

தற்பொழுது, மரித்தவர்கள் அக்கினியில் போடப்பட்டு அவர்களை கொல்லவும், சித்திரவதை செய்யவும் இடமாக எதுமில்லை. மரித்த எல்லோரும் அவரவர் கல்லறைகளில் ஜீவனை அடையும்படி அல்லது ஆக்கினையை அடையும்படி உயிர்தெழுதலுக்காக நித்திரையில் காத்துக்கொண்டிருக்கிறார்கள். (யோவான் 5:29). கடைசி நியாயத்தீர்ப்பு முடிந்த பிறகு துன்மார்க்கர்கள் அக்கினிக்கடலிலே தள்ளப்படுவார்கள். (வெளிப்படுத்தின விசேஷம் 20:14)

## நரகத்தின் நோக்கம் என்ன?

வேதாகமத்தில் தேவனை மன்னிக்கும் தன்மை கொண்டவராகவும் மற்றும் கருணையுள்ளவராகவும் காட்டுகின்றன. யோனா கர்த்தரை "நீர் இரக்கமும், மன உருக்கமும் நீடியசாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவரும் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமான" (யோனா 4:2) என்று விவரிக்கிறார். வேதாகமத்திலும் தேவனின் நீதியை வலியுறுத்துகின்றன "அவர் கன்மலை; அவர் கிரியை உத்தமமானது; அவர் வழிகளெல்லாம் நியாயம், அவர் நியாயக்கேடில்லாத சத்தியமுள்ள தேவன்; அவர் நீதியும் செம்மையுமானவர்" (உபாகமம் 32:4)

தேவன் மனிதனை படைத்த பொழுது அவன் மகிழ்ச்சியான மற்றும், இணக்கமாக வாழ்க்கை வாழ சட்டதிட்டங்களை உருவாக்கினார். ஆனால், ஆதாமும் ஏவாளும் வேறு பாதையை தேர்வு செய்தபொழுது அது அழிவையும் மற்றும் மரணத்தையும் கொண்டு வந்தது. தடுக்கப்படாவிட்டால், பாவமானது உலகத்தையும், மனித இனத்தையும் இறுதியாக அழித்துவிடும். அன்பின் காரணமாக, தேவன் தீமை எனும் நோயை தடுத்து நிறுத்த ஒரு திட்டத்தை உருவாக்கினார். இயேசு தேவனின் அன்பை வெளிப்படுத்துவதற்காகவே வந்தார், விருப்பத்துடனே மரித்தார், நம் பாவத்தால் வரும் விளைவுகளில் இருந்து அதாவது நித்திய மரணத்திலிருந்து காப்பாற்றுவதற்காக வந்தார்.

தேவனின் அன்பான இதயத்தினால் தான் பாவத்தினை நிறுத்துவார். ஆனால் இந்த இறுதி 'சம்பளமானது' நரகத்தில் நித்தியமான வாழ்க்கை அல்ல, அது நித்திய மரணம். நாம் வேதத்தில் போதித்துள்ள நரகம் பற்றியதை, எப்பொழுது சரியாக புரிந்துகொள்கிறோமோ அப்பொழுது தான் தேவனின் உண்மையான குணத்தினை புரிந்துகொள்ளமுடியும். கல்வாரியிலே "கிருபையும், சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும், நீதியும், சமாதானமும், ஒன்றையொன்று முந்தஞ்செய்யும்" (சங்கீதம் 85:10).

சாத்தான் நரகத்தை பற்றி ஒரு சிதைந்த பார்வையை காட்டுகிறான். ஆதில் தேவனை வக்கிர குணமுடையவராகவும், முடிவில்லாத சித்திரவதை கொடுக்கும் இடத்தில் மனிதன் காலமெல்லாம் நெளிவதை பார்த்து சந்தோஷபடுவதாக சித்தரிக்கின்றான். இந்த மாதிரியான முறுக்கப்பட்ட சித்தரித்தல் தேவ குமாரன் சிலுவையில் அனுபவித்த வேதனைகளுக்கு முரண்படுகிறது. நாம் நேசிக்கிறவர்களையும், பாவிகளையும், நித்தியமாக நரகத்தின் அக்கினியில் சுட்டெரிப்பதில் ஆனந்தம் கொள்கிற ஒரு தேவனை நீங்கள் நேசித்து சேவிக்க முடியுமா?

தீமைக்கு தக்க தண்டனை கொடுப்பது தான் நீதியுள்ள நியாயம். பல கோடி மக்களை கொல்ல காரணமான அடால்ஃப் ஹிட்லரை விட உலகத்தின் ஆரம்பத்தில் ஆபேலை கொன்ற காயினுக்கு நரகத்தில் பல ஆயிர வருடங்கள் கஷ்டங்களை அனுபவிப்பது எந்த விதத்தில் நியாயமாக இருக்கமுடியும்? அது நீதியில்லையே. உண்மையான நீதியானது பாவத்துக்கு தக்க தண்டனையாக இருக்க வேண்டும். இதை எண்ணிப் பார்க்கவும், "தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்தும் ஆயத்தமாயிராமலும், அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான். அறியாதவனாயிருந்து, அடிகளுக்கு ஏதுவானவைகளைச் செய்தவனோ சில அடிகள் அடிக்கப்படுவான். எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும்; மனுஷர் எவனிடத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ அவனிடத்தில் அதிகமாய்க் கேட்பார்கள்" (லூக்கா 12:47,48). ஆயினும், கடைசியில் தண்டனையானது துன்மார்க்கர் மரித்தவுடன் முடிந்துவிடும்.



தேவன், தன்னிச்சையாக எந்த துன்மாக்கரையும் தண்டிக்கமாட்டார். ஜீவன் கொடுப்பவரிடமிருந்து விலகிச்செல்லுவதால் இயற்கையாகவே மரணத்திற்கு நடத்திச்செல்லும். யாரையும் அழிப்பதற்கு தேவன் பழிவாங்கும் எண்ணம் உடையவரல்ல. "கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால் : நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன் வழியைவிட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" (எசேக்கியேல் 33:11). தேவனுக்கு "ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லோரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2 பேதுரு 3:9).

துன்மர்க்கரின் கடைசி அழிவு என்பது தேவனின் "அபூர்வமான வேலை" (ஏசாயா 28:21). தேவன் தான் உருவாக்கியவர் எடுக்கும் தனிப்பட்ட முடிவுகளுக்கு மதிப்பளிக்கிறார். தேவன் அவர்களை தன்னை நேசிப்பதற்கு கட்டாயப்படுத்துவதில்லை. துன்மர்க்கரின் கடைசி முடிவானது அவர்கள் தேர்ந்தெடுக்கும் முடிவாகும், இவர்கள் கடவுளின் கருணையிலிருந்து விலகி தங்கள் இஷ்டப்பட்ட சுயநலமான பாதை தேர்வால் - அந்த பாதையானது அவர்களை நித்திய மரணத்திற்கு நடத்திச் செல்கிறது.

## உலகத்தை சுத்தம் செய்வது

நாம் ஏற்கனவே கற்றிருப்பது போல, துன்மார்க்கர் மரித்ததும் உடனே நரகத்திற்குள் தூக்கி போடபடுவதில்லை. நரகத்தின் அழிக்கும் அக்கினி எப்பொழுது சம்பவிக்கும் என்பதை அப்போஸ்தலர் யோவான் விவரித்துள்ளார்.

> "அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகி, பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளாகிய கோகையும் மாகோகையும் மோசம்போக்கும்படிக்கும், அவர்களை யுத்தத்திற்குக் கூட்டிக்கொள்ளும்படிக்கும் புறப்படுவான்; அவர்களுடைய தொகை கடற்கரை மணலத்தனையாயிருக்கும். அவர்கள் பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைத்து கொண்டார்கள்; அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப்போட்டது" (வெளிப்படுத்தின விசேஷம் 20:7-9).

இந்த முழு பூமியானது அக்கினிக்கடல் போலாகும், துன்மார்க்கரையும் அவர்கள் செய்த காரியங்களையும் எரித்து அழித்துப்போடும். மரணம் கூட அழிந்தே போகும். "அப்பொழுது மரணமும், பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம்" (வசனம் 14).

இதற்கு அடுத்த அத்தியாயத்தில், இதற்கு பின்பு என்ன நடக்கும் என்று கூறுகிறது. யோவான் பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று" (வெளிப்படுத்தின விசேஷம் 21:1) என்று தொடர்கிறார். அதாவது நரகத்தின் அக்கினியானது பூமியையும் அதின் தீங்கையும் சுத்திகரித்துவிடும். தேவன் மறுபடியும் இந்த உலகை சரியான நிலைக்கு கொண்டு வருவார்.

தேவன் புதிய உலகில் ஏதாவது ஒரு மூலையில், நித்தியத்திற்கும் எரிந்துகொண்டிருக்கும் ஒரு குழியில் துன்மார்க்கரை முடிவில்லா சித்திரவதை அனுபவித்து அதனால் வலியில் கதறும் இடத்தை அவர் ஒதுக்குவார் என்று உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியுமா? அப்படியானால் இதை போல ஒரு இடம் இரட்சிக்கப்பட்டவர்களுக்கு பரலோகமாக இருக்காது. மாறாக பெற்றோர் தங்கள் மகன் அல்லது மகள் வேதனையால் கதறுவதை அறிந்து கேட்கும் பொழுது அதுவே அவர்களுக்கு நரகமாக இருக்கும்!



## என்றென்றைக்கும் என்றால் என்ன?

இந்த சொற்தொடர்கள், 'அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்' (வெளிப்படுத்தின விஷேசம் 14:11) மற்றும் 'அவியாத அக்கினியினால்' (மத்தேயு 3:12), ஆகியவை நரகத்தின் அக்கினி எப்போதும் அணையாது என்று அர்த்தம் கொள்ளவில்லையா?

என்றென்றும் என்று வேதத்தில் மொழிபெயர்க்கப்பட்ட சொல்லானது எப்பொழுதும் 'முடிவில்லாதது' என்று அர்த்தம் கொள்வதில்லை. வேதாகமத்தில் இந்த சொல்லை ஐம்பத்தி ஆறு முறை ஏற்கனவே முடிவு அடைந்ததற்கு பயன்படுத்தியுள்ளது. யாத்திராகமம் 21:1-6இல், ஹீப்ரு வேலைகாரன் அவன் எஜமானுக்கு என்றென்றும் ஊழியம் செய்யவேண்டியது தெளிவாக சொல்லப்போனால் அவன் உயிரோடு இருக்கும் மட்டும் தான். சாமுவேல் ஆகிய அன்னாளின் மகனை தேவனுடைய



ஆலயத்திற்கு அழைத்து சென்று அங்கே என்றென்றும் தங்கியிருக்க கூறி (1 சாமுவேல் 1:22) பின் அதனை விவரமாக கூறியது என்னவென்றால் "அவன் உயிருடன் இருக்கும் வரை"
(வசனம் 28) என்பது.

இந்த சொல்லை தெளிவாக சங்கீதம் 48:14இல் விவரிப்பது என்னவென்றால், "இந்த தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார்". ஏதோம் தேசத்தின் சங்காரத்தை குறித்து "இரவும் பகலும் அது அவியாது; அதின் புகை என்றென்றைக்கும் எழும்பும்;..." (ஏசாயா 34:10). இப்போது எரிந்துக்கொண்டிருப்பதில்லை என்பது நமக்கு தெரியும், ஆனால் வேதத்தின் கூற்றுப்படி அது பாழாயிருக்கும்.

நாம் பார்த்த 'என்றென்றும்' என்ற சொல்லின் விளக்கத்தின்படி, துன்மார்க்கர் அக்கினியில் உயிர் இருக்கும் வரை கஷ்டப்படுவார்கள். பின் வேதம் கூறுவது போல துன்மார்க்கர் "என்றென்றைக்கும் அழிந்து" போவதற்கே ஏதுவாகும்" (சங்கீதம் 92:7). இதன் பொருள் என்னவென்றால், அக்கினி அதன் வேலை முடிந்ததும் அணைந்துவிடும். ஆதலால் பாவிகளுக்கான தண்டனை நித்தியமானது. தேவனை தீய கொடுமைக்காரனாக துன்மார்க்கரை தீராத வேதனை நிலையில் கஷ்டப்படுத்துதலை சித்தரிக்கும் வார்த்தை எதுமில்லை. பாவம் இந்த உலகத்தையும் அதில் உள்ளவர்களையும் அழித்துவிடும் என்று அறிந்ததினால் நம்முடைய அன்பான தேவன் பாவத்தை இல்லாமல் செய்திடுவார்.

அவியாத அக்கினி என்பது அணைக்க முடியாத நெருப்பாகும். ஒரு முறை தன் வேலையை பார்க்க ஆரம்பித்துவிட்டதென்றால், எதனாலும் அதை நிறுத்த இயலாது. அதே போல, நரகத்தில் அக்கினி எரிய தொடங்கிவிட்டால், எவ்வளவு நீர் ஊற்றினாலும் அந்த தீயை அணைக்க இயலாது. மத்தேயு 3:12 இல் கோடிட்டு காட்டப்பட்டுள்ள "அவியாத அக்கினி" என்பது பாவிகளின்




மரணத்தை பற்றி பேசுகிறது. ஏனென்றால் தேவனை வேதாகமத்தில் "பட்சிக்கிற அக்கினி" (உபாகமம் 4:24) என்று விவரிக்கப்படுகிறது, தாங்கள் செய்த பாவங்களுக்கு வருந்தாத துன்மார்க்கர்கள் அவர் முன்னால் உயிர்வாழ இயலாது. பாவிகள் அவர்கள் எதை பற்றிக்கொண்டிருந்தார்களோ அந்த பாவத்துடனேயே அக்கினிக்கு இரையாவார்கள். கடைசி வேளையில், எப்பொழுது அனைவரும் தங்கள் கடைசி தேர்வான தேவனை ஏற்பதா அல்லது நிராகரிப்பதா என்பதனை முடிவெடுத்திருக்கும் நிலையில் அவரின் மகிமை பொருந்திய வருகையானது நிச்சயமாக தீமை செய்வதை விட்டு திருந்த மறுத்தவர்கள் நிச்சயமாக அழிக்கப்பட்டு மரணமடைவார்கள்.

மத்தேயு 3:10 மற்றும் 12 ஆகிய இரண்டு வசனமானது இரு வகையான மக்களை காக்கப்பட்டவர்கள் மற்றும் தொலைந்தவர்கள் என முன்வைக்கின்றன, வசனம் 10 ஆனது தொலைந்தவர்களை நல்ல கனிகளை தராத மரத்திற்கு ஒப்பிடுகிறது மற்றும் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும். வசனம் 12 ஆனதும் பாவம் செய்தவர்களை எரிந்து விடும் 'பதர்' என்று குறிக்கப்படுகிறது. சுத்திகரிக்கப்படுபவர்களிடம் இருக்கும் நெருப்பு போல, நாம் வாழ்நாளில் செய்யும் பாவம் எரிந்து அழிந்துபோகும் அல்லது நாம் தேவனிடம் அதை ஒப்படைக்க விரும்பவில்லையென்றால் அது நம்மை அதனுடன் சேர்ந்த அழிந்துவிடும்.

## புழு சாவாமலும் என்றால் என்ன?

கர்த்தர் "உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதை பிடுங்கிப்போடு; நீ இரண்டு கண்ணுடையவனாய், நரக அக்கினியிலே தள்ளப்படுவதைப் பார்க்கிலும், ஒற்றைக் கண்ணனாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும் அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்" (மாற்கு 9:47,48) என்று கூறினார். இந்த பகுதியில் உள்ள 'நரகம்' எனும் சொல்லானது கிரேக்க சொல்லான 'கெஹன்னா' என்பதில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, நாம் அறிந்திருக்கிறோம் இது 'ஹின்னோம் பள்ளத்தாக்கு' என்பதின் மற்றொரு பெயர் என்று, எருசலேம் நகரின் குப்பை கிடங்கு - இங்கே நிராகரிக்கப்பட்ட மற்றும் மரித்த மிருகங்களின் உடலையும் எப்பொழுதும் எரிந்துக்கொண்டிருக்கும் நெருப்பில் தூக்கியெரியப்பட்டு அதற்கு இரையாக்கப்படும். நெருப்பில் இருந்து தப்பியவை தொடர்ந்து புழுக்களால் அழிக்கப்பட்டு வந்தது. 'கெஹன்னா' ஒரு அவமானகரமான, மொத்த அழிவை குறிக்கும் சின்னமாக விளங்கிய இடம்.

"இயேசு நரகத்தில் உள்ள அக்கினி அவியாது என்று போதித்தார். ஏசாயா "இதோ, அவர்கள் தாளடியைப் போல இருப்பார்கள், நெருப்பு அவர்களை சுட்டெரிக்கும். அவர்கள் தங்கள் பிராணனை அக்கினிஜுவாலையினின்று விடுவதில்லை; அது குளிர்காயத்தக்க தழலுமல்ல; எதிரே உட்காரத்தக்க அடுப்புமல்ல" (ஏசாயா 47:14) என்று கூறியுள்ளார். எரேமியா 17:27 இல் தேவன் எருசலேம் தீயினால் எரியும் அது 'அவிந்துபோகாதிருக்கும்' மற்றும் 'அரமனைகளைப் பட்சித்தும்' என்று தீர்க்கதரிசனமாக கூறியுள்ளார். அவியாத அக்கினி எருசலேமின் அழிவை குறிக்கின்றது, 'கெஹன்னா'வின் நெருப்பும், புழுக்களும் பாவங்களும், பாவம் செய்தவர்களும் அழிக்கப்படுவதனை குறித்து சுட்டிக்காட்டுகின்றன.


கடைசியாக "அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்" மாற்கு 9:48 என்பது அழிவில்லாத ஆன்மாவை பற்றிய எண்ணத்தை ஆதரிக்காது ஏனென்றால் 'புழுக்கள்' 'அழிந்த ஆத்துமாக்களில்' வேலை செய்வதில்லை. இயேசுவின் எண்ணப்படி, அக்கினிக்கடலிலே தள்ளப்படும் போது மனிதர்கள் தங்கள் உடலுடைய வடிவம் கொண்டே போவார்கள். மத்தேயு 5:30 இல், கிறிஸ்து "உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், உன் அவயங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும்" என்று கூறுகிறார்.



பாகம் - 4

# பரலோகம் என்றால் என்ன?

“யாருடைய தலை பரவோகத்தில்
உள்ளதோ அவன் தன் கால்களை கல்லறையில்
வைப்பதற்கு அஞ்ச தேவையில்லை”
மத்தேயு ஹேன்றி



## பரலோகம் - என்றென்றும் உண்மையான வீடு



சாத்தான் மரணத்தை பற்றி பொய்யானவற்றை கூறி மக்களை ஏமாற்றியது போல, அவன் பரலோகத்தை பற்றியும் தப்பான அர்த்தம் கொள்ள செய்யும் எண்ணங்களை நம்மிடம் ஏற்படுத்த முயற்சி செய்திருக்கிறான். நம்மை குழப்பம் அடைய செய்து பரலோகத்தை கற்பனையான கனவுபோன்ற மற்றும் பேய்கள் கூட இருக்கும் இடமாக சித்தரிப்பதன் மூலம் நமக்கு பரலோகத்தின் மேல் உள்ள பற்று இல்லாமல் போய் விடும் என்று சாத்தானுக்கு தெரியும்.

இதன் விளைவுகள்? பெரும்பாலான மக்கள் பரலோகத்தை உடலற்ற ஆவிகள் மேகத்தில் மிதந்து கொண்டிருப்பதாகவும் மற்றும் வீனைகளை வாசித்து கொண்டு உற்சாகமில்லாத அற்பமான இடமாகவும் கற்பனை செய்து பார்க்கின்றனர். பரலோகம் இப்படிப்பட்ட ஒழுங்கு இல்லாத ஒரு இடமாக இருந்தால் நம்மில் யாருக்கும் அங்கு போவதற்கு ஆர்வம் இருக்காது. மேலும், எவருக்கும் இந்த மாதிரி "பரலோகத்தின்" எந்த பகுதியிலும் இருப்பதை விரும்பமாட்டார்கள். எனினும் இதை போல பொய்யான கருத்து வேறு எதுவும் இருக்க முடியாது!

பரலோகத்தை பற்றிய யதார்த்தமான உண்மை நிலையை நாம் அறிந்து கொள்ள வேதாகமம் என்ன சொல்கிறது என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். தேவனின் வார்த்தையின்படி, பரலோகம் உண்மையானது - அனைத்து இடமும் உலகை போன்று உறுதியானது, ஆனால் பலமடங்கு சிறந்தது.

## புதிய எருசலேம்

தேவன் வாசம் செய்யும் இடம் பரலோகம். (1 இராஜாக்கள் 8:30).

வேதாகமத்தில் ஒரு பிரம்மாண்ட நகரை தேவன் தன்னை சேவிக்க தேர்ந்தெடுத்திற்கும் மக்கள் தங்குவதற்கான சிறந்த வீட்டினை வடிவமைத்து கொண்டிருக்கிறார் என்று விவரிக்கிறது. இயேசு, இந்த உலகை விட்டு செல்வதற்கு முன், அவர் தன்னுடைய சீடர்களுக்கு வாக்களித்தார்:

> "என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்து கொள்வேன்" (யோவான் 14:2,3).

இந்த வாக்குத்தத்தம் அனைத்து விசுவாசிக்கும் தான்!

இந்த அபூர்வமான நகரத்தின் பெயர் புதிய எருசலேம். (வெளிப்படுத்தின விசேஷம் 3:12). புதிய எருசலேமில் தேவன் தானே நம்முடன் வசிப்பார். வெளிப்படுத்தின விசேஷம் 21:23 கூறுவது "நகரத்திற்கு வெளிச்சங்கொடுக்கச் சூரியனும் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை; தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது, ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு"

தற்பொழுது அந்த பிரமாண்டமான நகரம் பரலோகத்தில் இருந்தாலும், தேவனுக்கு அதை இடம் மாற்றம் செய்யும் எண்ணம் உள்ளது.

> "யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கிவரக்கண்டேன்; அது தன் புருஷ னுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன் தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்" (வெளிப்படுத்தின விசேஷம் 21:2,3)

இந்த உலகிற்கு தான் புதிய எருசலேம் மாற்றப்படும். நிச்சயமாக அந்த நேரத்தில் இந்த உலகானது இப்போது இருப்பதை விட வேறு நிலையில் இருக்கும். வெளிப்படுத்தின விசேஷம் 21:1 "ஒரு புதிய வானம் மற்றும் ஒரு புதிய பூமி" என்று தெளிவாக கூறுகிறது. தேவன் இந்த உலகை சுத்தப்படுத்தி அதை மறுபடியும் தான் முதலில் திட்டமிட்டப்படி மீட்பார். "இதோ, நான் புதிய வானத்தையும், புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன். முந்தினவைகள் இனி நினைக்கப்படுவதுமில்லை, மனதிலே தோன்றுவதுமில்லை" (ஏசாயா 65:17) என்று தேவனின் வார்த்தைகளை பதிவு செய்கிறார். நமது உலகம் ஒரு புதிய சொர்க்கமாக மாறும், அங்கே தேவன் நம்முடன் இருப்பார்! புதிய உலகமானது சுத்தமாக இருக்கும், அதில் பிடிக்காத மற்றும் புண்படுத்தும் எவையும் இருக்காது.

புதிய எருசலேமானது இதுவரை இருக்கும் அனைத்திலும் பெரியது மற்றும் கண்கவர்ந்த நகரமாகவும் மற்றும் இதுவரை பார்த்திராததாகவும் இருக்கும். மனிதனின் சொற்கூறு, வெளிப்படுத்தின விசேஷம் 21 இன் படி, அதன் அளவு



12,000 கல் தொலைவு அதன் சுற்றளவு சுற்றி, விரிவாக கூறப்போனால் 1500 மைல் அல்லது 375 மைல் ஒவ்வொரு பக்கத்திலும்! கெட்டியான வச்சிரக்கல் சுவரானது 216 அடி உயரம், மற்றும் பன்னிரெண்டு அடித்தளம் பன்னிரெண்டு விதமான விலைமதிப்பற்ற கற்கள் ஆனதால் அவை வானவில் பிரகாசிப்பது போன்ற தோற்றம் கொண்டதாகயிருக்கும். அந்த நகரத்தில் உள்ள தெருவானது சுத்தமான ஒளி புகும் தன்மை கொண்ட தங்கத்தால் செய்யப்பட்டு 'தெளிவான கண்ணாடியைப் போன்று இருக்கும். ஆனால் இது இன்னும் சிறந்ததாகும்!

இரட்சிக்கப்பட்டவர்கள் பயன்படுத்த ஒரு விசேஷ மான நதி மற்றும் மரம் அந்த நகரத்தில் இருக்கும் என்று வெளிப்படுத்தின விசேஷம் 22:1,2 கூறுகிறது.

> "பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறதை எனக்குக் காண்பித்தான். நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின்

இருகரையிலும், பன்னிரெண்டு விதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது. அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கயமடைவதற்கு ஏதுவானவைகள்".

யார் இந்த மரத்தில் உள்ள கனியை புசிக்கின்றனரோ அவர்கள் ஏராளமான மற்றும் நித்திய ஜீவனை அனுபவிப்பார்கள்!

## புதிய சரீரங்கள்

அனேக மக்கள் ஆச்சரியப்படுவது என்னவென்றால் நமக்கு பரலோகத்தில் இருக்கும் பொழுது உண்மையான உடல் இருக்குமா என்பதே. உண்மையிலே, நமக்கு உண்மையான, நோயற்ற குறைபாடற்ற உடல்கள், சிதைந்த, அல்லது வேறுவிதமான குறைகள் இல்லாதது இருக்கும். இதன் பொருள் என்னவென்றால் பார்வையற்றோர் பார்ப்பார், காதுகேளாதவர்களுக்கு காதுகள் கேட்கும் மற்றும் முடமானவர்கள் நடப்பார் என்பது தான். நாம் பூரணமான ஆரோக்கியம் மற்றும் எல்லையற்ற சக்தி அனுபவிப்போம். இந்த மாற்றமானது கர்த்தரின் இரண்டாம் வருகையின் பொழுது நடக்கும், அப்பொழுது "அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவர்" (பிலிப்பியர் 3:21)

அவரது உயிர்தெழுதலுக்கு பிறகு கர்த்தர் அவரது சீடர்களுக்கு அவருக்கு உண்மையான தேகம் கொண்டு இருந்ததை மற்றும் அவர் ஆவி இல்லை என்பதை நிருபித்தார். கர்த்தர் அவர்களிடத்தே "நான்தான் என்று அறியும்படி என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள், என்னைத் தொட்டுப்பாருங்கள்; நீங்கள் காண்கிறபடி, எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறதுபோல ஒரு ஆவிக்கு இராதே" என்றார் (லூக்கா 24:39). நமது புதிய உடலானது கர்த்தரின் உடலை போன்ற உண்மையானதாக இருக்கும்.

கூடுதலாக, தேவன் அவரது இராஜ்ஜியத்தில் "மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது" (வெளிப்படுத்தின விசேஷம் 21:4). மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 7:16,17 கூறுவது என்னவென்றால் "இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை" மற்றும் "தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார் என்றான்" என்கிறது.



## நித்திய மகிழ்ச்சி

அதனால், நாம் பரலோகத்தில் என்ன செய்து கொண்டிருப்போம்?



பல் வேறு எல்லையற்ற தன்மை கொண்ட நமது தேவன் இருக்கையில் வியக்கவைக்கும் வேலைகளுக்கு பஞ்சமிருக்காது என்பதை நாம் நிச்சயமாக நம்ப முடியும். புதியவர்களுக்காக, ஏசாயா 65:21,22 கூறுவது என்னவென்றால் "வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருப்பார்கள், திராட்சத் தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைப் புசிப்பார்கள். அதனால், ஏசாயா 11 மற்றும் 65 கூறும் தீர்க்கதரிசனங்கள் என்னவென்றால் புதிய உலகில் எல்லா மிருகங்களும் பழக்கப்படுத்த கூடியவையாக இருக்கும், நாம் நமது நேரத்தை அவைகளைப் பற்றி அறிந்து கொண்டு படிக்கவும் மற்றும் அவைகளுடன் தொடர்பு ஏற்படுத்தி கொள்வோம், மற்றும் தேவன் உருவாக்கிய எண்ணிலடங்கா மற்ற காரியங்களுடன் சேர்த்து அனுபவிப்போம்.

நாம் பயணங்கள் செய்து சுற்றிப்பார்ப்போம், தெய்வீக இசையை கேட்டு மகிழ்வோம், இறைவனை ஆராதிப்போம், அன்பானவர்களுடன் விஜயம் செய்வோம், புதிய நண்பர்களை ஏற்படுத்திக் கொள்வோம் - பல இலட்சக்கணக்கானவர்கள்! வேதத்தில் கூறப்பட்டுள்ள புகழ்பெற்றவர்கள் உள்பட நம் உலகின் எல்லா காலங்களில் சேர்ந்த பல பகுதி மக்களை சந்தித்து, தெரிந்து மகிழ்வோம். சற்று கற்பனை செய்து பாருங்கள் நாம் ஆதாம், நோவா, ஆபிரகாம், மோசே, பேதுரு, தாவீது ராஜா, மரியாள் போன்ற நாம் வாசித்தோ, கேட்டோ அறிந்தவர்களுடன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்போம். இவை எல்லாவற்றிற்கும் மேலாக, நாம், நம்மை காப்பதற்காக உயிர் நீத்த கர்த்தரானவருடன் பேசுவோம் மற்றும் நேரத்தை செலவிடுவோம் என்பதே!

தனிமை, சோகம், சுகவீனம் அல்லது மரணம் இல்லாத ஓர் இடத்தில் வாழ்வதை எல்லா குடியிருப்போரும் ஒருவரோடு ஒருவர் சமாதானத்துடன் வாழ்வதை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா! நம்பமுடியாத அழகான சுற்றுச்சூழல், மிகவும் சுவையான உணவுகள், சரியான சீதோஷ்ண நிலை, நம் உள்ளத்துக்கு கிளர்ச்சி ஊட்டுகிற இசையை மற்றும் இரக்கம் உள்ள நட்புகளை பெறுகிற இடத்தை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? இயேசு இவ்வுலகிற்கு வந்து நம்மை காப்பதற்காகவே மரித்தார் மற்றும் தேவனை நமக்காக ஒப்புரவாக்கி அதனால் நமக்கு இப்படிப்பட்ட வாழ்க்கையை கொடுத்தார். நாம் எப்போதும் சமாதானமாக வாழவேண்டும் என்பதே அவருடைய ஆவல் மேலும் விதவிதமான அர்த்தமுள்ள நிறைவான செயல்கள் செய்வதும் ஆகும்.

யோவான் 11:25ல் இயேசு "நானே உயிர்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்;" என்று அறிவித்தார் ஏனென்றால் கர்த்தர் மரித்தார் பின் உயிர்தெழுந்தார், அவரிடம் நித்திய வாழ்வு அவரை பின்பற்றுபவர்களுக்கு தந்து மற்றும் அவர்களை தன்னுடன் வாழ்வதற்கு கூட்டிச்செல்லும் வல்லமை இருக்கிறது.

இயேசு இதோ தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே என்று போதித்தார். (லூக்கா 17:21 பார்க்கவும்). அவருடைய ஒப்பற்ற இரட்சிப்பின் சலுகை மற்றும் உயிர்தெழுதலின் சத்தியத்தை நீங்கள் ஏற்றுக் கொண்டீர்களா? நீங்கள் இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லையென்றால், ஏன் நீங்கள் அவரிடத்தே இப்போதே திரும்பக்கூடாது? நீங்கள் அவரின் மேல் விசுவாசத்தை வைத்திடுங்கள், அவருடைய கருணை எனும் ஈவை ஏற்றுக்கொள்ளுங்கள், உங்களது பாவத்தில் இருந்து முழுமையான மன்னிப்பை அவரிடத்தில் இருந்து பெற்றுக்கொள்ளுங்கள் - அவர் வாக்களித்தபடி அவருடனே இருக்கும் முடிவில்லா எதிர்காலமானது உங்களதாகும்.

## மரணத்தின் வாசல் வரை சென்று வந்தவர்களின் அனுபவத்தை பற்றி

மரணத்தின் வாசல் வரை சென்று வந்தவர்களின் அனுபவம் (NDE's Near Death Experience) என்ன? மரணத்தை நெருங்கியவர்கள் தங்கள் உடலை விட்டு சென்றதை அல்லது தாங்கள் நேசித்தவர்களை பரலோகத்தில் பார்த்ததாக கூறும் வாக்குமூலம் தான் என்ன? நாம் மரணத்தின் வாசல் வரை சென்று திரும்பியவர்கள் கூறுவதை புரளி என்று கூற முடியாது; ஏனென்றால் மிக அதிகமான மக்கள் இதை அனுபவித்து இருக்கிறார்கள் - ஆனால் நாம் எந்த முடிவுக்கும் வருவதற்கு முன் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

உண்மையிலேயே, இந்த நிகழ்வுக்கு அறிவியல் விளக்கங்கள் இருக்கிறது. பெரும்பாலானவர்களுக்கு பிராணவாயு மூளைக்கு





போகாத நிலையே இந்த மாதிரி அனுபவம் ஏற்படுவதற்கு காரணமாகும் என்று நம்புகின்றனர். மனித மூளைக்கு பிராணவாயு செல்லாத பொழுது, பிரமைகளை உடனடியாக உருவாக முடியும். மருந்துகள் - அறுவை சிகிச்சையின் பொழுது பயன் படுத்துகிற மயக்க மருந்து உட்பட அல்லது அவசர சிகிச்சை சூழ்நிலைகளில் - இந்த மாதிரியான விளைவுகளை ஏற்படுத்தவல்லது. மேலும் தேவன் அந்த நபருடன் கனவு மூலமாகவோ அல்லது தரிசனத்தின் மூலமாகவோ பேச முயற்சிக்கும் போது சில சந்தர்ப்பங்களில் இது சாத்தியமானது.

காரணங்கள் எதுவாயிருந்தாலும் மற்றவரின் அனுபவத்தாலாவது அல்லது நமது சொந்த அனுபவத்தை அடிபடையாக வைத்து முடிவெடுப்பது ஒரு அபாயகரமான தவறாகும். வேதாகமம் மட்டுமே சத்தியத்தை பொய்யிடம் இருந்து பிரித்து எடுத்து உண்மையானவற்றை நமக்கு தெரிவிக்கும். வேதாகமத்தில் மரணம் வரை சென்று உயிர்பெற்றோறை (NDE's) முன்னோக்கி பார்வை பார்த்து மற்றும் காட்டுவது என்னவென்றால் நாம் மரித்தவுடனே பரலோகத்திற்கோ (அல்லது நரகத்திற்கோ) செல்வதில்லை என்பது தான். "மரித்தவர்களும், மவுனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள்" (சங்கீதம் 115:17)

இயேசு (மற்றும் வேதாகமம் அனைத்திலும்) மரணம் ஒரு தூக்கம் என்று தெளிவாக கற்றுதருகின்றன. உதாரணத்திற்காக லாசருவின் மரணத்தை நோக்கி பார்ப்போம். கர்த்தர் தன்னுடைய சீடர்களிடத்தே கூறியவை "'நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான், நான் அவனை எழுப்பப்போகிறேன்' என்றார். அதற்கு அவருடைய சீடர்கள்: 'ஆண்டவரே நித்திரையடைந்திருந்தால் சுகமடைவான் என்றார்கள்'. எனினும் இயேசுவானவர் அவனுடைய மரணத்தை குறித்து அப்படிச் சொன்னார்" (யோவான் 11:11-13).

கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை கொண்டு மரித்தவர்கள் அவர் வந்து அவர்களை உயிர்தெழ செய்யும் வரை அவர்கள் மறுபடியும் வாழ மாட்டார்கள் (1 தெசலோனிக்கேயர் 4:15,16; 1 கொரிந்தியர் 15:51,52 பார்க்கவும்)

## பரிசுத்த நகரம் என்பது உண்மையிலே பெரிதா?

யோவான் 14:2,3இல் கூறுவது "என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணியபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும்வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்".

புதிய எருசலேம் நகரத்தின் அளவை குறித்த சில கண்ணோட்டத்தை காணலாம். வேதத்தில் கூறப்பட்ட நகரமானது 140,000 சதுர மைல், புதிய மெக்ஸிகோ மாநிலத்தை விட சற்று பெரிதாக! இரட்சிக்கப்பட்டவர்கள் நகரத்தில் கூட்டமாக வசிக்க வேண்டியிருந்தால் அப்பொழுது ஒவ்வொருவருக்கும் 100 சதுர அடி கொடுக்கப்பட்டாலும், அங்கு முப்பத்தி ஒன்பது 100 கோடி மக்களுக்கு (3900 கோடி) இடம் இருக்கும் இது தற்போதைய உலக மக்கள் தொகையைவிட பல மடங்கு அதிகமானது. புள்ளியியலாளர்கள் நம்புவது என்னவென்றால் உலகில் வாழ்ந்த எல்லா மக்களும் இரட்சிக்கப்பட்டால் கூட அவர்களுக்கு அந்த நகரத்தில் நிறைய இடம் இருக்கும். எனினும், வேதாகமத்தில் தெளிவாக கூறுவது என்னவென்றால் அனைவரும் இரட்சிக்கப்படமாட்டார்கள் என்பதே (மத்தேயு 7:14). ஆதலால் அந்த நகரத்தில் ஏராளமான இடம் இருக்கும்.

இயேசு தனது சீடர்களிடம் அவர்களை விட்டு அவர் பிரியப்போகிறார் என்று கூறியவுடன் அவர்கள் பதற்றமடைந்தார்கள். அவர்களை சமாதானப்படுத்துவதற்காக, கிறிஸ்து விவரித்தது "என் பிதாவின் வீட்டில் அநேக



வாசஸ்தலங்கள் உண்டு" (யோவான் 14:2). மேலும், அவர் ஒவ்வொருவருக்கும் "ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணப்போகிறேன்" என்று உறுதியளித்தார்.

மெய்யாகவே, ஒவ்வொரு பிள்ளைகளுக்கு கொடுக்க பரலோக தந்தையிடத்தில் அநேக அறைகள் உள்ளது. இந்த அண்ட சராசரத்தை உருவாக்கிய தேவனுக்கு இரட்சிக்கப்பட்ட அனைவருக்கும் கொடுப்பதற்கு ஏராளமான இடமுண்டு. அவரது அன்புக்கு எல்லை இல்லை! பரலோகம் கொடுக்கும் அனைத்தையும் நீங்கள் அனுபவிக்க அங்கே இருப்பீர்கள் என்பதற்கு என்ன நிச்சயம் - என்ற கேள்வி மட்டுமே உள்ளது.

## நான் எப்படி பரலோகத்திற்கு செல்லமுடியும்?


கடந்த சில நாட்களாக வேதத்தில் மரணம் பற்றிய உண்மை, மறுமை (வாழ்க்கைக்கு பிறகு) மற்றும் பரலோகமும் நரகமும், மேலும் உங்களது உள்ளத்தையும், எண்ணத்தையும் சாத்தானின் மோசடியில் இருந்து காக்கும் வழி போன்றவற்றை பற்றி அறிந்துகொண்டதன் மூலம் நீங்கள் மிகப்பெரிய ஒரு அடியை எடுத்து வைத்திருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் பரலோகத்திற்கு இன்னும் தயாராகவில்லை என்று கவலைப்பட்டீர்கள் என்றால், நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியவை இவைதான்:

### 1 தேவன் உங்களை நேசிக்கிறார்

"தேவன் அன்பாகவே இருக்கிறார் (1 யோவான் 4:8). வேதாகமத்தில் கூறுவதென்னவென்றால் நம்மை உருவாக்கியவர் நம் மேல் அக்கறை உள்ளவராக இருக்கிறார். "நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்;" (1 யோவான் 3:1). தேவன் நீங்கள் சந்தோஷமாக வாழவேண்டும் என்று விரும்புகிறார் (எரேமியா 29:11 பார்க்கவும்). நமது கருணையுள்ள தேவன் அர்த்தமுள்ள மற்றும் மகிழ்ச்சிகரமான உறவை நம்மிடம் வைத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார், ஆனால்.

### 2 உங்கள் பாவமானது தேவனிடம் இருந்து உங்களை பிரிக்கிறது

நமது உலகமானது சிருஷ்டிப்பின் பொழுது குறையற்றதாக இருந்தது. அங்கே மரணமும், வலியும் இல்லை. ஆனால் பாவமும், தீமையும் தேவனுடைய தொடர்பு உட்பட எல்லாவற்றையும் உடைந்துவிட்டது. "உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது;" (ஏசாயா 59:2). நீங்கள் தனிமையில் இல்லை. அனைவரும் தேவனின் அன்பெனும் சட்டத்தை உடைத்து விட்டார்கள். "எல்லோரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி", (ரோமர் 3:23) ஏதோ ஒன்று நம்மை நம்மிடம் இருந்தே காப்பாற்ற வந்தால் ஒழிய, நாம் எல்லோரும் மரித்து போவது உறுதி, ஏனென்றால் "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23). பாவம் கொடுமையானது ஏனென்றால் அது வாழ்வின் ஆதாரத்தில் இருந்து நம்மை பிரித்துவிடுகிறது.



### 3 கிறிஸ்து நம்மை தேவனிடத்தில் மறுபடியும் இணைப்பார்

நம்மிடத்தே தேவன் வைத்திருக்கும் அன்பின் காரணமாக, நீங்களும், மற்றவர்களும் நிரந்தரமாக வாழ்வதற்கு கிறிஸ்து பாவத்தின் சம்பளத்தை தானே ஏற்றுக்கொண்டார். இயேசுவின் பாவமில்லா வாழ்க்கை உங்களது பாவத்தின் வாழ்வினை முடிவிடுகிறது ஆதலால் உங்களுக்கு இரட்சிப்பு உண்டாகிறது.

"நாம் அவருக்குள் தேவனுடைய நீதியிருக்கும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காக பாவமாக்கினார்" (2 கொரிந்தியர் 5:21). இயேசுவானவர் இரட்சிப்பின் ஈவை இலவசமாக அளிக்கிறார். இது எதுவோ நாம் வாங்குவது அல்ல பெறுவது மட்டுமே. அன்புடனும், சமாதானத்துடன் வாழ ஒரு புதிய இதயத்தை தருவதன் மூலம் தேவன் உங்களையும் மற்ற அனைத்து மானிடர்களையும் மீட்டு தம்முடன் வாழ்க்கை கொடுக்கும் உறவை ஏற்படுத்த விரும்புகிறார்.

### 4 இயேசுவை உங்கள் வாழ்விற்குள் ஏற்றுக் கொள்ளுங்கள்

"பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன். (ரோமர் 6:23). இப்பொழுதே நீங்கள் கிறிஸ்துவையையும் அவர் கொடுக்கும் ஈவையும் பெற்றுக்கொள்ள விரும்பினால், நீங்கள் இந்த எளிய வழிகளை பின் பற்றுங்கள்:



- இயற்கையிலே நீங்கள், உங்கள் பாவத்தால் மரிப்பீர்கள் என்று தெரிந்து கொள்ளுங்கள். "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23).
- இயேசு இன்றி நீங்கள் உங்களை இரட்சிக்க இயலாது என்று தெரிந்து கொள்ளுங்கள. "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" (யோவான் 15:5)
- நீங்கள் ஒரு பாவி என்று வருந்தி தேவனிடத்தில் ஒத்துக்கொள்ளுங்கள். "எல்லோரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி;" (ரோமர் 3:23, மத்தேயு 4:17)
- இயேசு உங்களுக்காக மரித்தார் என்பதை நம்புங்கள். தேவன், நம்மிடத்தில் அன்பு கூர்ந்ததால் அவருடைய குமாரனை கொடுத்தார். (யோவான் 3:16)
- நீங்கள் மன்னிக்கப்பட்டீர்கள் என்று நம்புங்கள். "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும், நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1 யோவான் 1:9).
- உங்களுக்கு நித்தியஜீவன் உள்ளது என்று நம்புங்கள். "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்" (யோவான் 6:47).
- இப்பொழுது ஒவ்வொருநாளும் நம்பிக்கையுடன் உங்கள் புதிய வழியில் வாழ்க்கையை வாழுங்கள்! ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர் மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொள்ளுங்கள்" (கொலோசெயர் 2:6).

நீங்கள் தேவனின் குடும்பத்தில் இணைந்தவுடன், அவரது அன்பு உங்களது வாழ்வை மாற்றிவிடும். "இப்படியிருக்க, ஒருவர் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான், "பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின" (2 கொரிந்தியர் 5:17). உங்களது பழைய பாவத்துடன் கூடிய இயற்கைதன்மை அழிக்கப்படுகிறது ஏனென்றால் கிறிஸ்து உங்களுக்குள் வாழ்கிறார் உங்களை வரப்போகும் தேவனின் ராஜ்ஜியத்திற்கு பொருந்துவதற்காக.

நீங்கள் இப்பொழுது பரலோகத்தின் மற்றும் புதிய எருசலேம் பிரஜை, உங்கள் வாழ்க்கையை தேவனின் இராஜ்ஜியத்தின் கொள்கைகளின் கீழ் கொண்டு அதன்படி இன்று வாழத் தொடங்குங்கள்!

இன்னும் அதிகமாக அறிந்துகொள்ள விரும்புகிறீர்களா? தேவனுடன் உங்களுடைய பயணத்தைத் தொடர, அடுத்த பக்கத்திலுள்ள எங்களது ஆழமான வழிகாட்டிப் புத்தகங்களைக் கண்டறியுங்கள்!

# அமேசிங் ∴பேக்ட்ஸ் வேதாகமப் பாடங்கள் மூலம் உங்கள் தேடுதலைத் தொடருங்கள்!






அற்புதமான, விடுதலையளிக்கும் வேதாகம சத்தியங்களை அறிந்துகொள்ள இந்தப் பாடங்கள் ஆயிரக்கணக்கானோருக்கு ஏற்கனவே உதவியுள்ளன. இப்பொழுதும், அமேசிங் ∴பேக்ட்ஸ் வேதாகமப் பள்ளியில் கொடுக்கப்பட்டபிரகாரம், வாழ்க்கையை மாற்றக்கூடிய இந்த 27 வேதப்பாடங்களை நீங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொரு பாடமும், தீர்க்கதரிசனம், அந்திக்கிறிஸ்து, மிருகத்தின் முத்திரை, இரட்சிப்பு போன்ற மற்றும் அநேகமான சத்தியங்களைத் தெளிவாகவும் முழுமையாகவும் புரிந்துகொள்ள படிப்படியாக உங்களை வழிநடத்தும்.

தாமதிக்காதீர்!

மனதைக் கவரும், ஊக்கமூட்டும் இந்தத் தொடர் சத்தியங்கள் உங்கள் எதிர்காலத்தை தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் எதிர்கொள்ள உதவும்.

## aftv.in/bible-study ல்

இன்றே எங்களை சந்திக்கவும்.

### ஒரு சில பாடத்தலைப்புகள்:

நீங்கள் நம்புவதற்கு இன்னும் ஏதேனும் எஞ்சியுள்ளதா?

சாத்தானை தேவன் படைத்தாரா?

குறிப்பிட்ட மரணத்திலிருந்து மீட்கப்படுதல்

விண்வெளியில் உள்ள பிரம்மாண்டமான நகரம்

மகிழ்ச்சியான திருமணத்திற்குரிய முக்கியக் குறிப்புகள்

மற்றும் பல!



அஞ்சல்-வழி பாடங்களுக்காக விண்ணப்பிக்க உங்கள் முகவரியை எழுதவும்.
அல்லது aftv.in மூலம் இப்புதகங்களை உங்களுக்கு சொந்தமாக்கிக்கொள்ளவும்.

AMAZING FACTS
India

+91 916 916 4480
www.AmazingFactsIndia.org

ஒவ்வொரு புதன்கிழமையும்
மாலை 6:30 மணிக்கு,

போதகர் டக் உடன் சேர்ந்து
தேவனுடைய வார்த்தையைப்
படிக்க வாருங்கள்!

NAMBIKKAI
TELEVISION



## இந்தப் பத்திரிக்கையை வாசித்து மகிழ்ந்தீர்களா?

இன்னும் அதிகமான வேதாகம சத்தியங்களைக் குறித்து ஆராய **Bookstore.AFTV.in** பார்க்கவும்.

இப்புத்தகங்கள் ஆங்கிலம், ஹிந்தி, தமிழ், மற்றும் தெலுங்கு மொழிகளிலும் கிடைக்கிறது!




### கர்த்தருடைய நாள்

கிறிஸ்துவின் வருகை, அவர் வரும் விதம் மற்றும் அடையாளங்கள், இரகசிய வருகைக் குறித்த உண்மைகள், அவருடைய வருகைக்குப் பின் என்ன நடக்கும் என்பவற்றை கண்டுகொள்ளுங்கள். விசேஷமாக, சீக்கிரம் நடக்கவிருக்கும் அந்த நிகழ்விற்கு எவ்வாறு ஆயத்தமாவது என்பதையும் நீங்கள் கற்றுக்கொள்வீர்கள்; இதனால் எதிர்காலத்தை நீங்கள் தைரியமாக சந்திக்கமுடியும்!

### அற்புதமான ஆரோக்கிய உண்மைகள்!

வண்ணமயமான இந்தப் பத்திரிக்கையானது வல்லமையான எட்டு வேதாகம ஆரோக்கிய பாடங்களை நேரடியான மற்றும் கவர்ந்திழுக்கும் விதத்தில் விவரித்துள்ளது. இதில் நல்ல உணவுத்திட்டத்தின் நன்மைகள், உடற்பயிற்சி, ஓய்வு மற்றும் ஓய்வுநாள், சூரியஒளி, தண்ணீர் மற்றும் பல தலைப்புகளை நீங்கள் காணலாம். இப்பொழுதே ஆரோக்கியத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்!




Suggested Donation Rs. 100